யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 பங்குனி 16 றஜப் 17 இதழ் 47
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 29-3-1986

### ஈழத் தமிழருக்காக ஏப்ரல் 5ல்
## லண்டனில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

(லண்டன்)

இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலையைக் கண்டித்து எதிர்வரும் ஏப்ரல் ஐந்தாந்திகதி லண்டன் ஹைட் பாக்கிலிருந்து ரஃபல்கார் வரை ஒரு மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்த ஈழ ஒருமைப்பாட்டு இயக்கம் தீர்மானித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் புகலிடம் கோரியுள்ள யுள்ள தமிழர்களைத் திருப்பி அனுப்ப வேண்டாமெனவும்; இலங்கைக்கு வெளிநாடுகள் வழ்ங்கும் ஆயுத உதவிகள் நிறுத்தப்பட வேண்டுமெனவும் கோரும் சுலோகங்கள் மேற்படி ஊர்வலத்தில் இடம் பெறும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னல்களுக்குள்ளாகியுள்ள இலங்கைத்தமிழரின் போராட்டத்துடன் வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் கொண்டுள்ள ஒருமைப்பாட்டினை உலகுக்கு வெளிப்படுத்தும் ஒரு நிகழ்ச்சியாக இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் அமையுமாம் (ஷ)

### ● யாழ். ஆஸ்பத்திரியில்
# இன்று முதல் அவசர சிகிச்சை மட்டுமே!

## வைத்திய நிபுணர் கார் கடத்தலின் எதிரொலி

(யாழ்ப்பாணம்)

**யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சையை மட்டுமே அளிப்பதென்று நேற்று அவசரமாகக் கூடிய யாழ். அரசினர் வைத்திய சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.**

நேற்று அதிகாலை யாழ். அரசினர் ஆஸ்பத்திரியின் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் வி. கிருஷ்ணராஜாவின் கார் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டதன் எதிரொலியாகவே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

நேற்று அவசர நோயாளிகளுக்குஉடன் சிகிச்சை பகுதிக்குப் பொறுப்பாக விருந்த டாக்டர் கிருஷ்ணராஜாவின் கார் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர் உரியநேரத்தில் ஆஸ்பத்திரிக்குச் சமூகமளிக்க முடியாதிருந்தமையினால்உயிராபத்துள்ளநோயாளிகளே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் அரசினர் வைத்திய சங்கத்தின் மேற்குறிப்பிட்ட அவசரக் கூட்டத்தின் இறுதியில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''தொடர்ந்து நடைபெறும் வன்செயல்களினால் வடமாகாணத்தில் ஓரளவாவது இயங்கி வந்த யாழ். அரசினர்போதனா வைத்தியசாலை மிகவும் பாதிப்புக்குள்ளாகியது, சமீபத்தில் நடைபெற்ற புகையிரத எரிப்பின் விளைவாக அத்தியாவசிய மருந்துக்களைக் கொண்டுவருவது மிகவும் சிரமாகவுள்ளது. மேலும் வசதியற்ற புற்று

[5ம் பக்கம் பார்க்க]

### ஓமந்தையில் தற்காலிக ராணுவ முகாம்?

(வவனியா)

ஓமந்தைக்கண்மையிலுள்ள ரம்பைக் குளத்தில் வைத்து ரயிலுக்கு வைக்கப்பட்ட தீயினால் 120 சிலிப்பர்க்கட்டைகள் முற்றாக எரிந்து விட்டதாகவும் குண்டுவைத்து தகர்க்கப்பட்டதால் 45 ரயில் தண்டவாளங்கள் நெளிந்தும் வளைந்துமுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் ரயில்பாதை திருத்தும் வேலை துரிதமாக ஆரம்பிக்கப்படவிருப்பதால் தற்காலிகமாக இராணுவ முகாம் ஒன்று ஓமந்தையில் அமைப்பதற்கான நடவடிக்

[5ம் பக்கம் பார்க்க]

### காரைதீவில் 300 பேர் கைது

[மட்டக்களப்பு]

அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைதீவை சுற்றிவளைத்த அதிரடிப்படையினர், சோதனை நடத்தியபொழுது 300 பேரைக் கைதுசெய்துள்ளனர்.

ஆரயம்பதியிலும் அதிரடிப் படையினரால் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம் பெற்றது [மா]

## மேலும் 3 வீடுகள் வல்வையில் தகர்ப்பு!

[வல்வெட்டித்துறை]

நேற்று முன்தினம் மாலையில் வல்வை இராணுவத்தினர் முகாம் சுற்றுடலிலுள்ள மூன்று பெரிய வீடுகளைக் குண்டுவைதது்த் தகர்த்தனர் பயங்கர சத்தங்களினால் வல்வையில் பெரும் பதற்றம் காணப்பட்டது.

இதற்கு முந்திய தினங்களில் தகர்க்கப்பட்ட வீடுகளின் சொந்தக்காரர்கள் வல்வைப் பிரஜைகள் குழுவினரிடம் தங்கள் நஷ்டங்கள் குறித்து முறையிட்டுள்ளனர்.

### பிக்குகளின் அரசஎதிர்ப்பு ஊர்வலம்!

(கொழும்பு)

வேலைநிறுத்தம் செய்யும் தாதிமார்தொழிற்சங்கத்தின் தலைவராக ஒரு பௌத்த பிக்கு பதவி வகிப்பது குறித்து அரச தரப்பில் தெரிவிக்கப்பட்ட கூற்றுகளுக்கு ஆட்சேபம் தெரிவித்து நேற்றுமுன்தினம் நூற்றுக்கும மேற்பட்ட பிக்குமார் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றினை நடத்தினர்.

பொலிசார் இந்த ஊர்வலத்தைத் தடுத்துநிறுத்த முயன்ற பொழுதிலும், பிக்குமார் தமது ஊர்வலத்தைத் தொடர்ந்து நடாத்தினராம்.

### தாதிமாருக்காதரவாக
## கொழும்பு டாக்டர்களும் வேலைநிறுத்தம்?

[கொழும்பு]

வேலைநிறுத்தஞ்செய்து, தற்சமயம் வேலை நீக்கஅபாயத்தை எதிர்நோக்கியுள்ள அரசாங்க தாதிமார்களுக்கு ஆதரவாக கொழும்பு ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்த டாக்டர்களும் வேலை நிறுத்தத்தில் குதிககவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளையில், மருந்தாளர்கள், எக்ஸ்-கதிரியலாளர்கள், பரிசோதனைக்கூட ஆய்வாளர்கள் ஆகியோர் திங்கள் முதல் தாதிமார்களுக்கு ஆதரவாக வேலைநிறுத்தம் செய்யப் போவதாக இவர்கள் அங்கம் வகிக்கும் சங்கம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

(ஷ)

## 8 பேர் ஆற்றுக்குப் பலி!
### விடுதலையான இளைஞர்களைப் பார்க்கச்சென்ற உறவினர்

(மட்டக்களப்பு)

கைது செய்து விடுவிக்கப்பட்ட உறவுமுறையான இளைஞரைப்பார்க்க ஆவலுடன் ஆற்றைக் கடக்கும்போது தோணிகவிழ்ந்ததால் அதில் சென்ற பதின்மூன்று பேரில் 8 பேர் அந்த ஆற்றுக்கே பலியானார்கள் இதில இருவர் ஒன்றரை வயதுக் குழந்தைகள் ஐவர் பெண்கள்

நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு சொர்ணுவில் ஆற்றில் இப்பரிதாப சமபவம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்குவிலுக்கும் நரிப்புல்தோட்டத்துக்கும் இடையில் இந்த ஆறு இருக்கிறது.

பலியானவர்களில் 6 பேரின் சடலங்கள் மாத்திரம் மீட்கப்பட்டுள்ளன. தோணியில் சென்ற 13 பேரில் மீதியாயிருந்த 5 ஆண்களும் தெய்வாதீனமாக நீந்தித் தப்பிக்கொண்டனர்

இவர்கள் சென்ற தோணி ஆற்றில் கவிழ்ந்ததாலேயே இப்பரிதாப சம்பவம் நிகழ்ந்த இம்மரணங்கள் விபத்து மரணம் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

### பயங்கரவாதத்தை முறியடிக்க
## வி.மானக் கொள்வனவுக்கு 900 கோடி ரூபா செலவு!

(கொழும்பு)

''வடபகுதி பயங்கரவாதம் நாட்டின் பொருளாதார நிலையைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. ஹெலிகொப்டர்களையும், விமானங்களையும் கொள்வனவு செய்வதற்கு அரசு 900கோடி ரூபாவைச் செலவு செய்யவேண்டியுள்ளது' என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

வடக்கு, கிழக்குப்பகுதிகளில் இந்நிலைமை தோன்றிபிருக்காவிட்டால் இந்தப்பணத்தை அபிவிருத்தி வேலைகளுக்காகவும், சம்பள அதிகரிப்பிற்காகவும் செலவிட்டிருக்க முடியும். அரசு பயங்கரவாதத்திற்கு எதிராகப்போராடும் இக்காலகட்டத்தில் வேலைநிறுத்தம் செய்யுமாறு தொழிலாளர்களை எதிர்க்கட்சியினர் தூண்டிவருகின்றார்கள் என்று குற்றம்சாட்டிய பிரதமர் தாதிமார் வேலைநிறுத்தத்தைக்கைவிட்டு வேலைக்குத் திரும்பவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். (பி)

### கன்னியா : தமிழர் வெளியேறினர்

(கொழும்பு)

கன்னியாப் பகுதியில் வாழ்ந்த தமிழ்மக்கள் பலர் குடும்பத்துடன் யாழ்ப்பாணத்திற்கும், முல்லைத்தீவுக்கும், மட்டக்களப்பிற்கும் சென்றுவிட்டதால் தற்சமயம் அப்பகுதியில் தமிழர்கள் இல்லைஎனக் கூறப்படுகிறது.

## 9 ராணுவம் பலி! 'புலிகள்' அறிக்கை

[யாழ்ப்பாணம்]

திருகோணமலைமாவட்டத்திலுள்ள கன்னியாவில் தமது இயக்கப் போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடிச் சம்பவத்தில் ஒரு லெப்டினன்ட் உட்பட 9 இராணுவத்தினர் பலியானதாகவும் 8 இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

''நேற்றுக் காலை வில்கம் விகாரை இராணுவ முகாமிலிருந்து திருகோணமலைக்கு பொருள்கள் வாங்குவதற்காக 25 இராணுவத்தினர் நடந்தும் 11 இராணுவத்தினர் கவச வாகனத்திலும் வந்தபொழுது கன்னியா நீரூற்று சந்திக்கு அண்மையில் எமது வீரர்களால் பலத்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது கவச வாகனம் கண்ணி வெடியால் சிதறியதுடன் ஒரு லெப்டினண்ட் உட்பட9இராணுவத்தினர்பலியாகியும் 8 இராணுவத்தினர் காயமுமடைந்தனர் எமது தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை.

அஞ்சலி

நேற்று பரந்தனில் எமது வீரர் கார்த்திக் [கந்தையா ஜெகநாதன் முல்லைத்தீவு] என்பவர் இராணுவத்தால் சுடப்பட்டு வீரமரணமடைந்தார் அவருக்கு எமது வீரவணக்கத்தை தெரிவிக்கிறோம். [மா]

# சிறு விளம்பரம்

## FOR SALE

Concrete Mixer in good condition - Queen's, Pandaterruppu. C -1458

## விற்பனைக்கு

நல்லூருக்கு அருகாமையில் நல்ல சுற்றுடலில் வீடு கட்டுவதற்கேற்ற 2 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச இராமநாதன், 435/19, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். C-1446

ஒருவருடம் முட்டை இட்டதும் தற்போது 50% முட்டையிட்டுக் கொண்டிருக்கும் Hyline இனகோழிகள் விற்பனைக்குண்டு 40, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். C-1456

சிங்கர் தையல் மெஷின், அல்மாரி, சியஸ்ரா மெத்தைகள், கட்டில்கள், Bleling Oven, கசற் றேடியோக்கள், Wall Clock மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், திருநெல்வேலி வடக்கு, ஆடியபாதம் றோட், மருத்துவக்கல்லூரிக்கும் திருநெல்வேலி சந்திக்குமிடையில். C-1472

யாழ்ப்பாணம், 396, கே.கே.எஸ். வீதியிலுள்ள வீடு விற்பனைக்குண்டு. விபரங்கட்கு மேலேயுள்ள விலாசத்திற்கு நேரில் தொடர்புகொள்ளவும். C-1452

அப்பளம் தயாரிப்பதற்கான தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. அல்லது கமிஷன் அடிப்படையிலும் இடவசதியுடன் கொடுக்கப்படும். தொடர்பு: 484, பீச் றோட், தந்தைஇல்லம், நாவாந்துறை, வடக்கு. C- 1470

Broilers இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம், சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (C-1366)

வீட்டுத்தளபாடங்கள், கட்டில், மேசைகள், கண்ணடி அலுமாரி, Dressing Table, குளிர்சாதனப்பெட்டி, Washing Machine, புதிய Chopper Cycle, கசற் றேடியோக்கள், சில்வர், பித்தளை Pyrex கிளாஸ் வகைகள், கிளாஸ் புத்தக அலுமாரி, அல்ஷேசியன் நாய், நாய்க்கூடு, அரிசிப்பத்தாளம், Typewriter, வெளியூர் பெட்சீற், கம்பளிகள் உடன் விற்பனை குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் றோட், திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்குமிடையில். (C1451)

சருவாட்டுக்குத் தேவையான அரைத்த உப்புத்தூள் விற்பனைக்குண்டு எம். ஜீ எம்; 777, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611. [C 1432]

## இரண்டு லட்சம் செலவில் விடுதி

[பச்சிலைப்பள்ளி]

வவுனியா மாவட்டத்தில் உள்ள பெரியதம்பனையில் விவசாய விரிவாக்க உத்தியோகத்தருக்கான விடுதி ஒன்று சுமார் இரண்டு லட்சம்ரூபா செலவில் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகின்றது.

## குத்தகைக்கு

சகல தளபாடங்களுடன் 176 ச அ. பரப்புள்ள கடையொன்று யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் உடனடியாக குத்தகைக்குக் கொடுக்கப்படும். சனி, ஞாயிறு தினங்களில் தொடர்புகொள்க. பவானி பேணிச்சர் பலஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [C 1449]

## தேவை

பார்மஸியில் மருந்து விற்பனையாளராகப் பணிபுரிய அனுபவமுள்ள பெண் தேவை தூர இடங்களிலுள்ளவரென்றால் தங்குமிட வசதி, சாப்பாடு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் 9-00 மணிக்கும் 12-00 மணிக்குமிடையில் நற்சான்றிதழ்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். குறிஞ்சி மெடிக்கல்ஸ் அன்ட் குரோசறீஸ், சென்றல் நேர்சிங் ஹோம் பிள்ளையார் கோவில் முன்னால், திருநெல்வேலி. (C 1465)

Hand Paper Cutter நல்ல நிலைமையில் தேவை. உயர் கல்விப் பதிப்பகம், 36, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. C 1475

## வகுப்புகள்

ரேடியோ - ரி.வி., வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், சுருக்கெழுத்து, தட்டெழுத்து — புதிய பிரிவுகள் 28-03-86 29-03-86 இல் ஆரம்பமாகின்றன. முதலில் சேருபவரிடம் குறைந்த கட்டணம் அறவிடப்படும். சான்றிதழ் பெறுமதியானவை Vispa Engineering, 328, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். [C 1408]

## கல்வி

Chartered Prelim - Auditing மேற்படி பாடத்திற்குரிய வகுப்பு நெறி 30-3-86 ஞாயிறு காலை ஆரம்பம். அனுபவம் மிக்க ஆசிரியர். இதர பாடங்கட்கு வகை செய்யலாம் தொடர்பு கொள்ளவும்: வைரவர் கடாட்சம், பலாலி வீதி, திருநெல்வேலி. (A.G.A ஆபிசுக்கருகே). தொலைபேசி: 24424. (C 1386)

## கோலவுடைத்துணி வழங்கல்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின். உப-அலுவலகங்களுக்கு 1986-ம் ஆண்டுக்குத் தேவையான கோலவுடைத்துணிகளை வழங்குவதற்கான கூறுவிலைகள் என்னால் 11-4 86 ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களையும் உரிய படிவங்களையும் இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வை. மு. பஞ்சலிங்கம்,
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை.

அபிவிருத்திச்சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
1986-03-27.

[C 521]

## புதிய நிர்வாகிகள்

(அராலி)

அராலி இந்துக் கல்லூரி அபிவிருத்திச்சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: திரு. சி. தாஸ் உப-தலைவர்: திரு இ. டானியேல், செயலாளர்: திரு கி நெல்லிநாதன், பொருளாளர் திரு. இ சச்சிதானந்தன் ஒன்பது பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## நன்கொடை

(மாவிட்டபுரம்)

மல்லாகம் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு தளபாடங்கள் பெறுவதற்கு சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா நன்கொடை வழங்கியுள்ளார்.

மேற்படி நிலையத்தில் தளபாடங்கள் இல்லாத குறையை எடுத்துக் கூறியதையடுத்து மேற்படி உதவி கிடைத்துள்ளது.

இம்மாதம் 30-ந் திகதி மேற்படி நிலையத்தில் நடக்கும் கூட்டத்தில் திரு. க. கனகராசா உரையாற்றுவார்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில்

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த தம்பு ஸ்ரீபாலன் என்பவரின் மரண சாதன மற்ற மரண சொத்துக்கள் சம்பந்தமாக.

— மரணமெய்தியவர்.

தம்பு ஸ்ரீபாலன் பெண் இராஜேஸ்வரி, நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.

— மனுதார்.

வழ. இல: த/108

எதிராக

[பராயமற்றவர்கள்]

,, 1. ஸ்ரீபாலன் ராஜீவன்
,, 2. ஸ்ரீபாலன் யெகதீபன்
,, 3. ஸ்ரீபாலன் காண்டீபன்
4 ஸ்ரீபாலன் பமிலா

எல்லோம் நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை. இவர்கள் தங்கள் வழக்குப் பாதுகாவலரான 5-ம் எதிர்மனுதார்மூலம்.

5 தம்பு புண்ணியமூர்த்தி, வேலணை கிழக்கு, வேலணை.

இவர் 1 முதல் 4 வரையிலான பராயமற்ற எதிர் மனுதார்களின் வழக்குப் பாதுகாவலராக.

— எதிர் மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986 ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாது என்பதற்கு ஏதும் காரணம் காட்டுமாறும் மேற்குறித்த எதிர் மனுதார்கள இம்மன்றில் அன்று ஆஜராகுமாறும் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1986-ம் ஆண்டு மாசி மாதம் 28-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
சு. வ. கணேசன்,
பதிவாளர்.

வரைவு:
ச. இளங்கோவன்,
மனுதாரின் சட்டத்தரணி.
[C 1468]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற நா. மாரிமுத்து சிவப்பிரகாசம் சங்கானை மேற்கு மரண சாதன விடயமாக,

- மரணமெய்தியவர்.

இல. T. 249

சிவப்பிரகாசம் கைம்பெண் பங்கயவல்லி, சங்கானை மேற்கு, சித்தன்கேணி.

மனுதார்.

எதிர்

சிவப்பிரகாசம் நவரத்தினராஜா சித்தன்கேணி

எதிர் மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 198் ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 திகதி முற்பக 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு பங்குனி மாதம் 21ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
வி. இராமச்சந்திர ஐயர்,
பதிவாளருக்காக.

எம். கே. சுப்பிரமணியம்,
மனுதார் சட்டத்தரணி
C 1419

## தந்தை செல்வா நினைவாக சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவினதும் கோப்பாய் முன்னாள் பாராளுமன்ற பிரதிநிதியான கதிரவேற்பிள்ளையினதும் நினைவு தினத்தையொட்டி வருகின்ற 31ம் திகதி திங்கட்கிழமை அரியாலை மேற்கில் காலை முதல் மாலைவரை சிரமதான வேலைகள் நடைபெறும்

அரியாலை மேற்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய சுற்றாடலும் வீதிகளும் இச் சிரமதானத்தின் போது துப்பரவு செய்யப்படும்.

இந்தச் கிரமதானம் அரியாலைமேற்கு சமாதானசபைத் தலைவரும் திருநெல்வேலி இந்து வித்தியாலய அதிபருமான திரு சி வைகுந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். (ஐ)

## தந்தை செல்வாவின் 88 வது நினைவுதினம்

[யாழ்ப்பாணம்]

தந்தைசெல்வாவின் 88-வது பிறந்தநாளை நினைவு கூருமுகமாக இம் மாதம் 31ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் தந்தைசெல்வா அறங்காவல் குழுவினர் விசேட கூட்டமொன்றினை நடத்தவுள்ளனர்.

தந்தைசெல்வா அறங்காவல் குழுத்தலைவர் திரு. கு. நேசையா தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கு. பரராசசிங்கம் முன்னாள்செனட்டர் திரு. எஸ். நடராஜா அறவழிக்குழு செயலாளர் திரு. க ஜீவகதாஸ் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

## A/L 88 பிரிவு

**ஆரம்பம்: 29 - 3 - 86**

8 30 விலங்கியல், 9-30 தாவரவியல்,
10-30 பௌதிகம், 11-30 இரசாயனம்.

**SCIENCE ACADEMY;**

[B. M. C க்கு முன்],
யாழ்ப்பாணம். [A 417]

## அறிவித்தல்

**அபிவிருத்திச்சபை, ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை**

புதிய நிர்வாகசபையைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை 05 04-86 காலை 11 மணிக்கு வைத்தியசாலை மேல்மாடியில் நடைபெறும். வடமராட்சிப் பகுதி ஆரம்ப சுகாதார நிலையங்களின் நிர்வாகசபைகளை இதில் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

மாவட்ட வைத்திய அதிகாரி,
பருத்தித்துறை.

(C 1455)

**யாழ். மாவட்ட சகல வீடியோ கிளப் ஸ்தாபனங்களின்**

## பொதுக்கூட்டம்

இடம்: "எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்",
(1-ம்மாடி), 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 30-03-86 [நாளை] ஞாயிறு.
நேரம்: பி. ப. 4-00 மணி சரியானநேரத்துக்கு தொடங்கும்)

நாம் எதிர்நோக்கும் இன்றைய பிரச்னைகளை ஆராய்வதற்காக அனைவரும தவறுது கூட்டத்திற்கு சமுகமளிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

**வீடியோ கிளப் ஸ்தாபகர்கள்**

[A 418]

★ மத்திய ஆபிரிக்கக் குடியரசில்

# பிரெஞ்சு 'ஜகுவார்' விமான விபத்து

# 20 பாடசாலை மாணவர்கள் பலி!

பங்குயி, மார்ச்-28

**மத்திய ஆபிரிக்கக் குடியரசில் நேற்று முன்தினம் நிகழ்ந்த விமான விபத்தொன்றில் சுமார் 20 மாணவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் அநேகர் ஆபத்தான நிலையில் சிகிச்சைக்குள்ளாகியுள்ளனர்.**

மத்திய ஆபிரிக்கக் குடியரசு நாட்டின் தலைநகரான பங்குயிலேயே இந்தக் கோர விபத்து இடம்பெற்றது. விபத்துக்குள்ளான விமானம் ஒரு பிரெஞ்சு 'ஜகுவார்' ரக போர் விமானமென்று தெரிவிக்கப்பட்டது.

பங்குயி நகருக்கருகிலுள்ள பிரெஞ்சுவிமானப் படைத் தளமொன்றிலிருந்து இந்த விமானம் கிளம்பிவந்துள்ளது. பயிற்சி நடவடிக்கையில் இந்த 'ஜகுவார்' போர் விமானம் ஈடுபட்டிருந்தபோது திடீரென இதில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறையடுத்தே பங்குயிலுள்ள பாடசாலை ஒன்றின் மீது இது விழ்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விமானத்தின் பைலட் உட்பட அப்பாடசாலையைச் சேர்ந்த 20 மாணவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் அநேகர் ஆபத்தான நிலையில் காயமடைந்துள்ளனர். இறந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

உலகச் செய்திகள்

இந்த விபத்தையடுத்து பங்குயி வாசிகள் பெரும் ஆத்திரமடைந்தனர். அவர்கள் இந்த நகரிலுள்ள பிரெஞ்சுப் பிரஜைகளைக் கற்களால் வீசித் தாக்கினர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து பல பிரெஞ்சு மக்கள் இங்குள்ள தமது தூதரகத்தினுள் அடைக்கலம் புகுந்தனர். மத்திய ஆபிரிக்கக் குடியரசின்அதிபர் நாட்டு மக்களை அமைதியாக இருக்கும்படி வேண்டியுள்ளார்.

பிரெஞ்சு அரசாங்கமும் இந்த விபத்துக் குறித்துக் கவலைவெளியிட்டுள்ளது பிரஸ்தாப விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறினாலேயே இவ்விபத்து நேர்ந்ததாகவும், இவ்விபத்தில் ஏற்பட்ட இழப்புகளுக்குத் தகுந்த நஷ்டஈடு வழங்கப்படுமெனவும் பிரெஞ்சு அதிபர் அறிவித்துள்ளார். [கி]

## தென் லெபனனில்

# இஸ்ரேலிய ஜெட்விமானங்கள் எட்டுப்பேர் குண்டுவீச்சில் பலி!

ரெல்அவிவ், மார்ச்-28

தென் லெபனனினுள் இஸ்ரேலிய ஜெட் போர் விமானங்கள் சில நேற்று ஊடுருவின அவை அங்கு மேற்கொண்ட குண்டு வீச்சில் எட்டு அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் பாலஸ்தீனர்கள் எனத் தெரிவிக்கப் பட்டது.

வடக்கு இஸ்ரேலிய நகரமான ஹிரியஷ்மோனு என்ற நகரம்மீது தென் லெபனனிலுள்ள பாலஸ்தீன பகுதிகளிலிருந்து ஏவுகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்குப் பதிலடியாகவே இஸ்ரேலிய ஜெட் விமானங்கள் தென் லெபனனினுள் ஊடுருவின

இஸ்ரேலிய தரப்பில் தெரிவிக்கப்பட்ட தகவலில், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த பல்வேறு தீவிரவாதப் பிரிவுகளின் நிலைகள் மீதே தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும், இதனையடுத்து பாலஸ்தீன கெரில்லாக்களே கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

ஆனால் பாலஸ்தீன இயக்கம் இத்தகவலை மறுத்துள்ளது இஸ்ரேலின் இந்த விமானத் தாக்குதலினால் அப்பாவி பாலஸ்தீன மக்களே கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [கி]

## 2000 கம்பியூட்டர்கள்

புதுடில்லி, மார்ச்28,

இந்த ஆண்டிலும், அடுத்த ஆண்டிலும் [86-87] அனைத்து இந்தியப் பாடசாலைகளிலும் இரண்டாயிரம் கம்பியூட்டர்கள் பொருத்தப்படவுள்ளன.

மனிதவளத்துறை அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

இந்திய கல்வித்துறையைக் கம்பியூட்டர் மயப்படுத்தும் முதல்கட்ட நடவடிக்கையாக இது அமையும் எனவும் அவர் கூறினார்.

கம்பியூட்டர்களிலான மென் மற்றும் கடினப்பொருட்களைத் தயாரிக்க முன்வரும்படியும் அவர் இந்திய மாணவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். [கி]

## குண்டு மக்கள் பார்வைக்கு

(அராலி)

வல்வெட்டித் துறையில் விமானத் தாக்குதலின் போது விழுந்து வெடிக்காத குண்டு ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மக்கள் பார்வைக்காக அராலி வடக்கு செட்டியாமடம் சந்தியிலும் அராலி செற்கு பிள்ளையார் கோவிலடியிலும் வைத்திருந்தார்கள். 6கிலோ எடையும் 4அடி உயரமான இக்குண்டுடன் இணைக்கப்பட்டிருந்த குண்டில் அதன் விபரம் எழுதப்பட்டிருந்தது.

## அன்பளிப்பு

(சாவகச்சேரி)

அறவழிப் போராட்டக்குழுவின் நூலகத்துக்கு ஆசியா பவுண்டேசன் நிறுவனமும் கிறீஸ்த்தவ ஒத்துழைப்பு நிறுவனமும் இணைந்து, சுமார் இருபத்தையாயிரம் ரூபாய் பெறுமதியான 2500 புத்தகங்களை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளன

## மேலும் ஒருவிமானத்தைக் காணவில்லை!

புதுடில்லி, மார்ச்-28

இருவார காலத்தில்மேலும் ஓர் இந்திய விமானப் படை விமானம் நேற்றுக் காணமற் போய்விட்டது.

ஏ. என் 32 ரகத்தைச் சேர்ந்த இந்த விமானப்படை விமானத்தில் ஏழுபேர் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஸ்காட் என்ற இடத்திலிருந்து ஜாம் என்ற பகுதி நோக்கி இவ்விமானம் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது தற்போது இவ்விமானத்தைத் தேடும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன

இரு வாரங்களுக்கு முன்னர் ஜம்மு - காஷ்மீர் பகுதியிலும் ஒரு இந்திய விமானப் படை விமானம் 15 பேருடன் காணமற்போனது தெரிந்ததே [கி]

## தென்னாபிரிக்காவில்

# இருபிரெஞ்சு டாக்டர்கள் மீது பொலிஸ் தாக்குதல்!

கேப்ரவுண் மார்ச் 28

தென்னாபிரிக்காவின் போபடுஸ்வானு என்ற இடத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற மோதல்களில் இரு பிரெஞ்சு டாக்டர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

இந்த இருடாக்டர்களும் ஓர் ஆணும், மற்றையவர் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

போபடுஸ்வானுவில் கடந்த வாரம் கறுப்பினத்தவர்கள் மீது தென்னாபிரிக்கப் பொலிஸார் தாக்குதலை நடத்தினர். அப்போது ஸ்தலத்துக்கு விரைந்த இந்த இரு டாக்டர்களும் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க முன்வந்தனர்.

அவ்வேளையிலேயே தாக்குதலில் ஈடுபட்டிருந்த பொலிஸ்காரர்கள் இந்த டாக்டர் சோடியை மார்பு, முதுகுப்புறம், கைகள் என்பவற்றில் கடுமையாகத் தாக்கிய பின்னர் காரொன்றில் போட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் இந்த இரு டாக்டர்களும் 12 மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்து தாக்கப் பட்டனர்

இறுதியாக விடுதலை செய்யப்பட்டபோதே தமக்கு நேர்ந்த கதியை இவர்கள் பத்திரிகையாளரிடம் விபரித்தனர்.

சவுக்கு மற்றும் குண்டாந்தடியாகியவற்றால் மேற்கொண்ட தாக்குதல்களின் தழும்புகளும் இந்த டாக்டர்களின் தேகப்பகுதிகளில் இருக்கக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [கி]

## படகுப்பயணிகளைப் படையினர் கடலில் நீராட்டினர்!

(வேலணை)

பெண்கள் உட்படப் படகில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பத்துப் பேரை கடற்படையினர் நடுக்கடலில் தடுத்துக் கூட்டிச்சென்று கடலில் நீராட வைத்தனராம்

இந்தப்பத்துப்பேரும் காரைநகர் துறைமுகத்லிருந்து ஊர்காவற்றுறைகுப் படகில் சென்று கொண்டிருக்கையில் கடற்படையினர் நடுக்கடலில் தடுத்து மீண்டும் காரைநகர் துறைமுகத்திற்கு அழைத்துச் சென்று அங்குவைத்து படகோட்டிகள் இருவரையும் தாக்கியதுடன் பிரயாணிகளைக் கடலில் நீராடப் பணித்தனராம். இதனைத் தொடர்ந்து பெண்களும் ஆண்களுமாக 10 பேரும கடலில் இறங்கி முழுகினர்.

நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தையடுத்துகாரைநகர் ஊர்காவற்றுறைத் துறைமுகத்திற்கிடையிலான படகுச் சேவை இடைநிறுத்தப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

## மாணவர் இல்லாமையினால் பாடசாலைகள் இயங்காதநிலை

[மாவிட்டபுரம்]

கரையோரப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மாணவர்கள் பரீட்சைகளுக்கு சமுகமளிக்காது உள்ளனர். இதனால் பாடசாலைகளின் வரவு குறைந்துள்ளது.

கரையோரப் பகுதிகளான மயிலிட்டி, பலாலி, ஊறணி, காங்கேசன்துறை பகுதிகளில் நிலவிய பதற்றம் காரணமாக அப்பகுதி மீனவ குடும்பங்கள் அகதிகளாக வெளியேறியுள்ளது தெரிந்ததே. இதனால் அப்பகுதிகளில் உள்ள பாடசாலைகள் இயங்காத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்போது பரீட்சைகள் நடப்பதால் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புமாறு பாடசாலை அதிபர்கள் வேண்டு

(5ம் பக்கம் பார்க்க)

## மத்தியதரைக் கடலில்

# அமெரிக்க கடற்படை ஒத்திகை நிறுத்தப்பட்டது!

திரிப்பொலி, மார்ச்-28

மத்தியதரைக் கடற் பகுதியில் அமெரிக்காவின் ஆறாவது கடற்படை அணி தனது ஒத்திகைகளை நிறுத்தியுள்ளது.

பத்துத் தினங்களுக்கு இது நடைபெறுமென்று தெரிவிக்கப்பட்டது ஆயினும் நான்கு தினங்கள் முன்பாகவே இது நிறுத்தப்பட்டுவிட்டது. லிபிய கடற் பிராந்தியத்தில் இடம் பெற்ற தாக்குதல் நடவடிக்கையின் எதிரொலியாகவே விரைந்து இந்த ஒத்திகை நிறுத்தப்பட்டது.

லிபிய அதிபர் கேர்ணல் கடாபி இந்த ஒத்திகை நிறுத்தத்தைத் தமது நடவடிக்கைகளுக்குக் கிடைத்த பெரு வெற்றி எனக் குறிப்பிட்டுள்ளார். தாம் மேற்கொண்ட பயமுறுத்தலையும், எதிர்ப்பையும் அடுத்தே இந்த ஒத்திகையை அமெரிக்கா நிறுத்தியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் இந்த ஒத்திகை நிறுத்தம்பற்றிக் கருத்து வெளியிடுகையில், ''அமெரிக்காவுடன் எந்தவொரு தீய சக்தியும் மோதமுடியாது என்பதையும், உலகம் பாதுகாப்பாகவே தொடர்ந்திருக்கின்றதென்பதையும் மத்தியதரைக் கடலில் அமெரிக்கா நிரூபித்து விட்டது'' என்றார்.

திரு. றீகன், மத்தியதரைக் கடலிலுள்ள அமெரிக்க ஆறாவது கடற்படை அணியின் தளபதிக்கும் வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார். [கி]

## கருணாநிதி வேண்டுகோள்!

சென்னை, மார்ச், 28

தமிழக உள்ளாட்சி மன்றங்கள் தெரிவுசெய்யும்சட்டமேல் சபைக்கான தேர்தல்களை நடத்தும்படி தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கேட்டுள்ளார்

தமிழ சட்ட மேல்சபை 63 இடங்களில் 21 இடங்கள் காலியாகவுள்ளன. இதனைத் தொடர்ந்தே அவர் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

திரு. மு. கருணாநிதி தமது வேண்டுகோளை தமிழக தேர்தல் ஆணையாளரிடமும் விடுத்துள்ளார். [கி]

## புங்குடுதீவு ஆசிரியர்களுக்கான பயிற்சியும் செயலமர்வும்

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு கல்வி வட்டாரத்தில் இம்மாதம் 28ம் 29ம் திகதிகளிலும் அடுத்த மாதம் 6 ஆகிய திகதியும் நடைபெறவிருந்த ஆசிரியர் சேவைக் காலப்பயிற்சியும் செயலமர்வும் தவிர்க்கமுடியாத காரணங்களினால் அடுத்த மாதம் 5,6,7, 8, 9 ஆகிய திகதிகளில் நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது,

### மணிவாக்கு

ஒரு மனிதனுக்குத் தேவையான அறிவு இல்லாத மூடர்களின் செயல்களே தந்திரம், ஏமாற்றம், அறவழி நிற்க, மறுத்தல் முதலியன.

— பிராங்லின்

## நமது நோக்கு

# எண்ணெய்ச் செல்வம் இறங்கும் காலம்

உலக நாடுகள் அனைத்திலும் அழிவுச் செய்தியே அதிகரித்திருக்கிறது.

நமது நாட்டிலே அன்புக்குரியவர் அழிந்து பட்டுப் போகின்றனர். நட்புக் கொண்டாடும் சமுதாயம் எம்மைக் கை கழுவி விடுகிறது.

இந்நிலையில் இங்கு வாழும் தமிழர்களுக்கு இனிக்கதி ஏது என்றொரு கலக்கம் இயற்கை. இத்தகைய உணர்வு தமிழர் பண்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டது.

மேல்நாட்டு அறிஞரே பண்டைத்தமிழரின் ''வாழ்க்கை வலியுறுத்தல்'' எனும் பண்பை தமிழ் இலக்கியத்தில் படித்துப் போற்றி இருக்கின்றனர்.

மக்கள் நல்வாழ்வு என்பது 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்ற தெருள் நோக்கைக் கொண்டது. இதற்குப் பிறப்பிடம் பிறரன்பு. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்ற இலட்சியம் எக்காலத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது இத்தகைய மனிதர் நட்பில் நம்பிக்கை கொண்டவர். நட்புக்கு இன்றியமையாதது சிரிப்பு.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன் எந்தப் புலவர் வள்ளுவர் குறிப்பிட்டிருக்கும் சிரிப்பை இவ்வாறு பாடியிருப்பார்? சந்தேகம்.

''நகல் வல்லார் அல்
லார்க்கு மாயிருஞாலம்
பகலும் பாற்பட்டன்று
இருள்''

இன்று இது வியப்புக்குரிய விடயம்.

உலகம் தலைகீழாகக் கவிழ்ந்தாலும் இந்த நூற்றுண்டின் ஆங்கிலப் புலவன் குறிப்பிடும் ''laughter and love of friends'' —சிரிப்பும் நட்பும் தமிழரின் புராதன சொத்துக்கள்.

நாம் குறிப்பிடும் சிரிப்பு உலகின் இயற்கையை ஆழமாகச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்களுக்கே உரியது. உணர்ச்சிவசப்பட்டவர்கள் உலகை ஒரு துன்பியல் நாடகமாகக் கொள்வது ஒரே நாணயத்தின் மறுபுறம்.

''வானந் துளங்கிலென் மண்கம்பமாகிலென்'' என்ற சொல்லோவியம் மயக்கஉணர்வுநீங்கி மெய்ப்பொருள் காணும் நிலையை வர்ணிக்கின்றது.

இன்று முதியோராக வாழும் மனிதர் இந்த நூற்றுண்டின் 29-33 கால எல்லைக்குள் உலக பொருளாதார வீழ்ச்சியால் மக்களும் நாடும் நலிவுற்றிருந்ததை நன்கறிவர்.

இரண்டாவது உலக யுத்தம் ஏற்படுத்திய அபாயங்கள், மீண்டும் வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தை தடுக்கமுடியவில்லை.

எனவே அன்றைய பொருளாதார வீழ்ச்சியில் சிக்குண்ட மக்களுக்கு கடந்த 15 வருடங்களில் எண்ணெய்- எரிபொருள் ஏற்படுத்திய துன்பங்கள் மலைபோலத் தோன்றும்.

அக்காலத்தில் வறுமையில் செம்மையாக வாழ முடிந்தது; மூன்றும் வகுப்பு அரசாங்க லிகிதருக்கும் மாதம் 40 ரூபாய் சம்பளம்; கொழும்பில் மட்டாகச் சீவிக்கமுடிந்தது.

'எரிபொருள்' கொடுமை இன்று உலகனைத்தையும் ஆட்டிவைத்திருக்கிறது; யாழ்ப்பாணத்தில் பால் தேநீர் 10 சதத்திலிருந்து இரண்டு ரூபாய்க்கு உயர்ந்த கதையை என்னென்று வர்ணிப்பது.

உலகனைத்தையும் எரிபொருளுக்காக பணயம் வைத்த நிறுவனமே 'ஒபெக்' என்றபெரும் விலாசம் பெற்றது. எண்ணெய் உற்பத்தி, ஏற்றுமதி நாடுகள் என்றது அதன் பொருள்.

இன்றுஎன்ன நடக்கிறது? ஜெனிவாவில் 'ஒபெக், அமைச்சர்கள் கூடி வீழ்ந்து கொண்டுபோகும் நிலையை எவ்வாறு கட்டுப்படுத்தலாமென்று ஆராய்கின்றனர்.

செல்வ நாடுகள் இருக்கட்டும் எங்கள் வறியநாடுகளுக்கு 'சலுகை' செய்யுங்கள் என்ற மன்றுட்டத்தை 'ஒபெக்' உதறித் தள்ளியது.

'மத்தியகிழக்கு பொன் விளையும் சுரங்கமாயிற்று. எங்கள் இளைஞர்கள், யுவதிகள் பலர் அங்கு அள்ளுப்பட்டனர். உழைத்தனர், உதைபட்டனர். பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்.

இன்று மத்தியகிழக்கு எரிபொருளுக்கு கிராக்கியில்லை. ஒரு பீப்பா 28 டொலரிலிருந்து 14க்கு சரிந்தது இன்னும் விழுந்து கொண்டே போகும்

இதன் விளைவு என்னவாயிருக்கும்? அது என்னவாலும் மத்தியகிழக்கின் துடுக்கு அடக்கப்பட்டது போல தமிழருக்குண்டான துன்பமும் மறைய வழி உண்டு.

இந்தச் சின்னக் கண்ணுல் இவை போன்ற வாழ்வும், தாழ்வும் எத்தனை கண்டோம்? சிரிக்க முடிந்ததால் உயிர் வாழ்கின்றேம்.

## பழம், காய்கறி இறக்குமதித் தடை

(பெல்பாஸ்ட்)

தென்னுபிரிக்கவிலிருந்து காய்கறிகள் பழங்கள் இறக்குமதிக்குஅயர்லாந்து அரசாங்கம் நேற்றுத்தடைவிதித்திருந்தது.

தென்னுபிரிக்க அரசின் இன ஒடுக்கல் கொள்கைகளைக் கண்டிக்கும்வகையிலேயே இத் தடை விதிக்கப்பட்டுள்ளது

இதே வேளை தென்னுபிரிக்காவில் திறந்தவெளிப்பகுதிகளில் பொதுச்கூட்டங்களை நடத்துவதற்கு கடந்த 9 ஆண்டுகளாக இருந்துவந்த தடை உத்தரவு மேலும் ஒரு வருடகாலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. (கி)

# இலட்சியத்திற்காக வாழ்ந்த இலக்கியவாதி டானியல்

டானியல் காலமானுர் என்ற செய்தியை செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணிக்குத்தான் அறிந்தேன். சோகம் கலந்த அதிர்ச்சி ஏற்பட்டது.

தோழர் டானியல் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாக ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறையில் தனித்துவமான தொரு முத்திரையைப் பொறித்த எழுத்தாளர். எழுத்தாளர் என்பதிலும் பார்க்க ஒரு அரசியல்வாதி, சமூக சீர்திருத்தப் போராளி என்ற முறையில்தான் அவருடனுன எனது பழக்கம் அமைந்தது

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் எத்தனையோ சிக்கல்கள், ஏன் பூகம்பங்கள் கூட வெடித்திருக்கின்றன. இவற்றின் மத்தியில் சரியான கொள்கைக்காரனுக நின்று சரியான பக்கத்தையே எடுத்திருக்கின்றுர். அவர் எப்பொழுதும் அரசியலை முதல் இடத்தில் வைத்தார். பிரபல்யமான இலக்கியவாதி என்ற அகம்பாவமோ இதனுல் ஏற்படக்கூடிய சந்தர்ப்பவாதமோ அவரை என்றுமே வென்றதில்லை. வடபகுதியில் கம்யூனிஸ்ட் இயக்கங்களின் கொள்கைகளைப் பரப்புவதிலும் கம்யூனிஸ்ட் இயக்கத்தை ஸ்தாபன ரீதியாகக் கட்டிவளர்ப்பதிலும் அவர் பெரும்பணியாற்றினுர். கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தோழர்களுக்கு எப்பொழுதும் உறுதுணையாக இருந்தார். ஆத்மீக உதவியும் பொருளாதார உதவியும் அளித்தார்.

யாழ்ப்பாணத் தமிழ் மக்களிடையே நிலவும்சாதிக்கொடுமையை எதிர்த்துப் போராடுவதில் தோழர் டானியல் தனது வாழ்நாள்பூராவும் முன்னணியில் நின்றுர். தோழர் டானியல் தனது வாழ்க்கையில் சாதிக் கொடுமையைப் பெரிதும் அனுமதித்திலர்.

### வீ. சின்னத்தம்பி

ஆகவே தமது பேச்சு, எழுத்து, செயல் அனைத்திலும் சாதிக் கொடுமையின் அகோரங்களை அவர் அம்பலப்படுத்தினுர். யாழ்ப்பாணத்தின் எந்தப் பகுதியிலும் சாதிக் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்கள் உதவிக்கு அவரை நோக்கி ஓடி வருவதும் தக்க உதவி பெறுவதும் எல்லோரும் அறிந்த விஷயங்களாகும். இந்தவகையில் தோழர் டானியல் தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரு தனிப் பெரும் தலைவராஞர்.

இலக்கியவாதி என்ற முறையில் தோழர் டானியல் சாதிப் பிரச்சினையையே தனது கருமையமாகக் கொண்டார். கொம்யூனிஸ்ட் புரட்சியொன்றின் மூலம்தான் இந்த அடக்கு முறைகள் ஒழியும் என்பதை அவர் இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எப்பொழுதும் எடுத்து விளக்கினுர் கனவுலகில் இருந்து கற்பனவாத கரும பொருள்களை கயிறு திரித்து எழுதும் ரகத்தைச் சேர்ந்தவர் அல்ல தோழர் டானியல். இது எவருமே மறுக்க முடியாத ஒரு உண்மை, ஈழத்தில் சரி, தமிழ்நாட்டில் சரி இவ்வளவு நீண்டகாலம் தொடர்பாகவும் ஆட்டம் அசைவின்றியும் இத்தகையதோர் மக்கள் பிரச்சினையை வைத்து கதை எழுதிய பெருமை தோழர் டானியலையே சாரும்.

ஐந்தாம் வகுப்பும் படிக்காத ஆங்கில அறிவு சற்றும் இல்லாத தோழர் டானியல் இலக்கிய உலகில் அங்கீகாரம் பெற்றது அவருடைய சிந்தனையாற்றலையும் படைப்பாற்றலையும் நிருபிக்கின்றன அதுவும் போராட்ட அரசியல் தத்துவத்தை ஆதரித்து அதற்காக உழைத்த ஓர் எழுத்தாளரை தமிழ் இலக்கிய உலகு பாராட்டியது, அவருடைய கொள்கையின் வலிமையை மட்டுமல்ல தோழர் டானியலின் தனிப்பட்ட ஆளுமையையும் காட்டுகின்றது.

மக்கள் விடுதலை இலட்சியத்திற்காக இலக்கியம் படைத்த தோழர் டானியல் கடந்து வந்த வாதை கரடு முரடானது. மிகவும் ஏழ்மைப்பட்ட குடும்பம் ஒன்றில் பிறந்த டானியல் சலவைத் தொழிலாளியாக அலைந்து திரிந்து சோடா விற்பவராக, சைக்கிள் கடை மெக்கானிக்காக இப்படியெல்லாம் சஷ்டப்பட்டுத்தான் வாழ்க்கையில் பொருளாதார ரீதியில் முன்னேறினுர். ஆனுல் அவரைப் பொறுத்தவரையில் இந்தப் பொருளாதார முன்னேற்றம் அவரை எவ்விதத்திலும் பாதித்துவிடவில்லை பருத்தித்துறைக் கடற்கரையில் 49ம் ஆண்டு நான் கண்ட அதே டானியலைத்தான் தற்பொழுது தமிழ்நாடு செல்ல முன்னர் இவரை கண்டேன். அதே வேட்டி, அதே சேட், அதே வாழ்க்கை முறைகள் எதிலும் மாற்றமில்லை. எங்கும் தூங்குவார். எங்கும் உண்பார். இப்படி இருப்பவர் நமது சமுதாயத்தில் அரிது. தோழர் டானியலின் இழப்பு முற்போக்கு உலகத்திற்கும் லட்சக்கணக்சான தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பொதுவாகத் தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

### நேற்று 88-வது பிறந்ததினம்:

## ''பேசரிய புகழ்படைத்தோன் பேரின்பநாயகம்''

வெள்ளைஉடல் வெள்ளை உளம் வெள்ளைநிறக் கதராடை
பிள்ளை எனப் பேசுகின்ற பிழை இல்லாத் தெள்ளு தமிழ்
முழு மதியின் நிலவுமுகம் முத்துநிகர் ஒளிச் சிரிப்பு
ஒழுகு நடைக் குறுதிசெயும் ஊன்றுகோல் கைப்பிடித்த
கோலத்தோடு இயங்கிவந்த கோகிலாத் திருவுருவம்
ஞாலத்தே ''பேரின்ப நாயகம்'' என்று உலவியது.

வெள்ளையர் தம் விறல்போக்கி வியத்தகுபோர் வெற்றி கண்ட
வள்ளியனும் காந்திமகான் வகுத்துப் பயிற்றி வைத்த
சீரிய நல்நெறி வாழ்ந்த சீராளன் பேராளன்
கூரிய நுண் மதிவாய்ந்தோன் குலவுகலைக் கடல் குடித்தோன்
பக்குவமாய் மாணவர்க்குப் பயன்கலைகள் பயிற்றியவன்
கொக்குவில் இந்து எனும் கல்லூரிக் கோரதிபன்

மேற்சாதி கீழ்ச்சாதி மேல் வருணம் கீழ் வருணம்
மாற்றரிய தலையெழுத்து மன்னுதெய்வம் வகுத்த விதி
மீட்சியில்லாக் கன்மமமென மிக்கவலி பெற்றகொள்கை
ஆட்சி செய்த நாட்டில் அன்று அறிவுப் போர் தொடுத்தே
'கேசரி' என்னுமொரு செய்தித்தாள் நடத்தியவன்
பேசரிய புகழ் படைத்தோன் பேராசான் ஒளிவிளக்கு
நன்றி ''குருவுக்கு அஞ்சலி''

## விஜயனு தோற்றுப்போனுன்?

விந்தையில் விந்தை! அந்த
விஜயனு தோற்றுப் போனுன்?
மந்தையின் நடுவே வந்தும்
மன்னரைக் கலங்க வைத்தோன்
அந்தகர் காணப் பார்வை
அருளினேன், லாசருக்கும்
தந்தனன் உயிரை! பின் ஏன்
தான் உயிர்விட்டான் அண்ணே?

தூக்கினுன் சிலுவை, யேசு
தூணிலும் கட்டப்பட்டே
ஆக்கினைப் பட்டான்! பின்னர்
ஆணியும் அறையப்பட்டான்!
'நாக்கிலே தாகம்' என்றும்
நாய்களால் பழிக்கப்பட்டான்!
தூக்கியே அடக்கம் செய்யத்
தூயன், ஏன் மரித்தும் விட்டான்?

ஆதவன் மறைவான் தானே?
அடுத்தநாட் காலை மட்டும்
தீதவன் — இருளில் ஆட்சி!
தீமையைப் போக்க வந்த
வேதநாயகனும் நாளை
விஜயனுய் உயிர்க்கும் காலை......
பாதகம் தோற்கும்! யேசு
பகல் ஒளி செய்வான் தம்பி.

-- 'சத்தியசீலன்'

## மகாஜனுவின் புதிய அதிபர்

[யாழப்பாணம்]

தெல்லிப்பழை மகாஜனுக் கல்லூரியின் புதிய அதிபராக திரு. க. நாகராஜா 3-12-85 தொடக்கம் கல்விப் பணிப்பாளரினுல் நியமிக்கப்பட்டிருக்கிறுர்,

முதுகலை மாமணிப் பட்டமும் கல்வியில் டிப்புளோமா பட்டமும் பெற்றிருக்கும் இவர் இதற்கு முன்னர் இந்துக் கல்லூரியின் உப அதிபராகப் பணிபுரிந்துள்ளார். இந்துக்கல்லூரியின் மாணவனுக, ஆசிரியராக, உப அதிபராக இருந்து அதிபராகப் பதவி உயர்வு பெற்றிருக்கும் இவர் வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

## தமிழ்ப் பேசும் மக்கள்

# ஒற்றுமையாக செயல்பட்டால் இலட்சியத்தை அடையமுடியும்

### நல்லூர்க் கூட்டத்தில் முன்னாள் மேயர்

[யாழ்ப்பாணம்]

''கூட்டணித் தலைமைப்பீடத்தில் பிளவை ஏற்படுத்தி நெருக்கடியை உருவாக்க சில தீய சக்திகள் முயன்று வருகின்றன. இதற்கு இடம் கொடுக்கக்கூடாது தமிழ்பேசும் மக்கள் ஒற்றுமையாக செயல்பட்டால் தான் எமது லட்சியத்தை அடைய முடியும்''.

தீவட்டி ஊர்வலமுடிவில், நல்லூர் கந்தசாமிகோவில் வீதியில் நடந்த கூட்டத்தில் முன்னாள் யாழ். மேயர் திரு ஆர். விஸ்வநாதன் இவ்வாறு கூறினார்.

இ.அண்ணாதி.மு க. பொது செயலாளர் பொன் மதிமுகராசா தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. விஸ்வநாதன் மேலும் கூறியதாவது:

''தமிழ்பேசும் மக்கள் மத்தியிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்த சில தீயசக்திகள் திட்டமிட்டு செயலாற்றி வருகின்றன. இதற்கு தமிழ்பேசும் மக்கள் இடம் கொடாது ஒற்றுமையாக செயல்பட்டு, நம் லட்சியத்தை அடைய வேண்டும்.

#### கூட்டணி மீறமாட்டாது

1977-ம் ஆண்டு தமிழ்பேசும் மக்கள் அளித்த தீர்ப்பை கூட்டணி எந்தச் சந்தர்ப்பத்திலும் மீறமாட்டாதுஎன உறுதியாக கூறுகிறேன்.

வடக்கு கிழக்கு மக்கள் ஒன்றுக இணைந்து செயல்பட்டால் தான் முழுப்பயனையடைய முடியும்''.

#### தொடர்ந்து போராட்டம்

தேவர் நலன்புரிசங்க பிரதிநிதி திரு. கிருஷ்ணராசா பேசுகையில், ''தாக்குதல்கள் நிறுத்தப்படும்வரை தமிழ் மக்கள் பிரச்னை தீரும்வரை ஒவ்வொருமாதமும் 27-ம் தேதி ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கும்'' என்றார்.

#### தீவட்டி ஏந்திய மக்கள்

செட்டியார் சங்கபிரதிநிதி திரு. செல்வவடிவேல் பேசுகையில் ''இன்று தீவட்டி ஏந்திய பொதுமக்கள் தாக்குதலை எதிர்த்து போராட தயாராகிவிட்டார்கள். நிலைமை மோசமாகுமுன் தாக்குதல்களை நிறுத்தி அரசியல் தீர்வுகாண வேண்டியது அவசியம்'' என்றார்.

சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வுக்கழக பிரதிநிதி டாக்டர் எஸ். சசிதரன் பேசுகையில், ''தமிழ்பேசும் மக்களை அழித்து ஒழித்து வருவதற்கு மூலகாரணமாக இருப்பவர்களின் கொடும்பாவிகளை மரண வீட்டு ஒலியுடன் யாழ்.நகரில் ஏப்ரல் 27ம் தேதி ஊர்வலமாகஎடுத்துச் சென்று ஒரு பொது இடத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் தீக்கிரையாக்குவது அடுத்த போராட்டமாக இருக்க வேண்டும் என்றும் இதனை இ. அண்ணா தி.மு.க. கூட்டுக்குழு முடிவு செய்யுமென்றும் கூறினார்.

இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவரும்,முன்னாள் யாழ் உதவி மேயருமான திரு.ஏ. துரைராசசிங்கம் கூறியதாவது;

''தாவடியில் கடந்த மாதம் 27ம்திகதி விமானக் குண்டு வீச்சு நடந்தது. ஒரு மணி நேரத்தில் நல்லூர்கந்தசுவாமி கோவிலுக்கு ஊர்வலமாக வந்து மக்கள் மனமுருகிக் கண்ணீர்விட்டழுது, கந்தனிடம் முறையிட்டனர். ஒரு மாதத்திற்குள் அரசின் ஒரு விமானம் அதனை ஓட்டிச்சென்ற விமானியுடன் கடலில் வீழ்ந்து மூழ்கியது''

''மக்கள் பட்டுவரும்துன்பம் பொறுக்கமுடியாமல் தீப்பிழம்பாக 10 மைல் பாத யாத்திரை வந்து இச்சந்நிதானத்தில் மீண்டும் தங்கள் குறைகளை கந்தனிடத்தில் கூறி அவன் மீது பாரத்தைப் போட்டுள்ளார்கள்''

இ அண்ணாதி.மு.க பொதுச் செயலாளர் பொன். மதிமுகராசா பேசுகையில் ''தீவட்டி ஊர்வலம் என்றதும் ஆரம்பத்தில் வரத்தயங்கியவர்கள் இன்று ஆயிரமாயிரமாக வந்து ஆதரவு தெரிவித்தனர். தெருவிலும் வழியிலும் தாய்மார்கள் சிறுகுழந்தைகள்கூட தீப்பந்தங்களுக்குதாமாகவே முன்வந்து எண்ணெய் ஊற்றி ஆதரவு தெரிவித்தனர். மக்கள் சக்தி மாபெரும் சக்தி இதனை எவரும் தடுத்து நிறுத்திவிடமுடியாது'' என்று கூறினார். (க

---

### மாணவர்கள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கோள் விடுத்தும் பெற்றோர் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப அச்சம் அடைந்துள்ளனர்.

இதற்கிடையில் இடம் பெயர்ந்தவர்கள் தினமும் தம் வீடு வாசல்களை பார்த்து வருகின்றனர். கரையோர பஸ் சேவைகளும் ஓரளவு நடைபெற்றுவருகின்றன.

---


**கடைசிநேர வரிவிளம்பரம்**

**விற்பனைக்கு**

National RX. 250 W. Two in One Sony T. V 20'' 20 X 20 — 2032 National வீடியோ டெக் 340 - 480 - 4 System - Sanyo Two in One Radio. S. T. L வீடியோ சென்ரர், No. 3. நவீனசந்தை மேல்மாடி, திருநெல்வேலி

C 1481

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30, 9-15
சத்தியராஜ்—கவுண்டமணி
**ரசிகன் ஒரு ரசிகை**

**சரவணபவன்**
மினி சினிமா
10-30, 2-30, 4-45, 7-00
SUMMER PARTY MURDERS
Adults Only

LIDO Jaffna
10-30, 2-30, 6-30
கமல்-ஸ்ரீதேவி-ரஜனி
**16 வயதினிலே**
புதிய பிரதி (கலர்)

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன் அம்பிகா கவுண்டமணி நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைதடி சித்தமருத்துவத் துறையில் தண்ணீர் தாங்கி அமைத்தல்**

கைதடியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை வளவிற்குள் தண்ணீர்த்தாங்கி அமைப்பதற்குப் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள், அளவுகள், மாதிரிப் படிவங்கள் போன்ற விபரங்களை பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து 04- 04- 1986-ம் திகதிவரை பெற்றுக்கொள்ள முடியும். விபரங்களுக்கான வேண்டுகோளுடன் 200/-க்கு தபாற்கட்டளை/ காசுக்கட்டளை அனுப்பப்பட வேண்டும். கேள்விகள் விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி 08-01-86 முற்பகல் 10-00 மணி ஆகும். விண்ணப்பக் கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் UJ/ F/ SK/ 03/ 08/ 04/ 86 என்ற இலக்கம் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்,

பதிவாளர்

(A 522)


---

### இன்றுமுதல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நோயாளிகள் கொழும்பு சென்று சிகிச்சை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இத்துடன் வாயு சிலிண்டர்கள் கொழும்பில் வெடித்ததனால் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு பிராணவாயு சிலிண்டர்கள் பெறமுடியாத நிலையு ஏற்பட்டுள்ளது இந்நிலையில் இன்று அதிகாலை சத்திர சகிச்சை நிபுணர் ஒருவரின கார் களவாடப்பட்டுள்ளது.

''யாழ் வைத்தியசாலை ஊழியர்கள் பல இன்னல்கள் மத்தியிலும் இந்த இக்கட்டான நிலையில் மனமுவந்து சேவையாற்றிவருவது மக்கள் அறிந்ததே கடந்த பல சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட பல வைத்தியர்களின் சேவையை நம் இழந்துள்ளோம் இன்றையகார் கொள்ளையினால் மேலும் ஒரு வைத்திய நிபுணரை இழக்கும்நிலை ஏற்பட்டுள்ளது இதனை கருத்திற்கொண்டு யாழ் அரசினர் வைத்தியசாலை வைத்தியர்கள் இன்று முதல் அவசர சிகிச்சையில் மட்டும் ஈடுபடுவார்கள் சக்தியற்ற நிலையிலிருக்கும் எம்மை மனமுடையச்செய்த கார்க்கொள்ளைச்சம்பவம்சுமுகமாகத் தீர்க்கப்படும்வரை அவசர சிகிச்சைகள் மட்டுமே எம்மால் அளிக்கப்படும். இந்நடவடிக்கையினால் ஏற்கனவே பாதிப்படைந்த மக்களுக்கு மேலும் ஏற்படும் துயரத்தையிட்டு நாம் மிக மனவருந்துகிறோம் ஆயினும் எமது நடவடிக்கை மக்களுக்கான வைத்தியசேவை மேலும் பாதிப்படையாமலிருக்க வேண்டுமென்ற தூரக்கண்ணோட்டத்துடனே எடுக்கப்படுகின்றது.

---


**இன்று கொடியேற்றம்**

**அருள் புரிவாய் ஐங்கரனே**

சீர்பூத்திலங்கும் மருதடி வேழமுகனே!
சித்தியெலாம் நல்கும் மருதடி விநாயகனே!
தீராத வினைகளைத் தீர்ப்பவனே! ஐங்கரனே!
திருவருளைத் தருபவனே! விக்கினேஸ்வரனே!
ஆர்த்த பிறவித் துயரினை நீக்குபவனே! ஆனைமுகனே!
அன்றருக்கு அன்பனே! கஜமுகனே!
எம்மினம் படும் துயர்களைந் தருள்வாய்.

கௌரி கணேஷநாதன்.


## றேகனுக்கு 114 இந்திய எம். பிக்கள் தந்தி

(புதுடில்லி)

அணு ஆயுத சோதனைகளுக்கு சோவியத் யூனியன் தடை விதித்திருப்பதற்கு ஏற்றவாறு செயல்படும்படி அமெரிக்க ஜனாதிபதி திரு. றேகனுக்கு இந்திய எம் பிக்கள் நூற்றுக்கும் அதிகமானோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

114 எம் பிக்கள் அனுப்பிய தந்திச்செய்தியில், இம்மாத இறுதிக்குள் அணுவாயுதத் தடைக்கு சோவியத்யூனியன் காலக்கெடு விதித்திருப்பதற்கு அமைவாக அதிபர் றேகன் அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுள்ளனர். விண்வெளியை இராணுவமயப்படுத்தல் ஆயுதக்குறைப்பு ஜெனிவா மாநாட்டு தீர்மானங்கள் ஆகியன பற்றியும் தமது கருத்தை இதில் வலியுறுத்தியுள்ளனர் இ காங்கிரஸ், கம்யூ கட்சி, தெலுங்கு தேசம், ஜனதா, பாரதீய ஜனதாகட்சி, பார்வார்ட் புளக், அ இ அ தி மு. க. உட்பட பல கட்சி எம் பிக்களும் இதில் கையெழுத்திட்டுள்ளனர். (ச)

### அகதிகள் அகதிகள்

(முல்லைத்தீவு]

திருமலைப் பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான அகதிகள் தினமும் வந்துகொண்டிருகிறார்கள். அவர்கள் குமுளமுனையிலும், முல்லைத்தீவிலும் தங்குவதற்கான வசதிகளை பொது மக்கள் செய்கிறார்கள்.


**45ம் நாள் நினைவஞ்சலி**



**பொ. மயில்வாகனம்**

ஆண்டவன் படைப்பு: 24-08-1946

அநியாய அழிப்பு: 10-02-1986

அன்புவழி காட்டி,
ஆதரவு நல்கி,
இங்கிதமாய் பேசி,
ஈடின்றி வாழ்ந்து
வந்தாய்.
உடையது விளம்பாது
ஊனுடலை நீர் துறந்து
எங்குதான் சென்றீரோ?
ஏங்குகிறதெம் இதயம்
ஐயா! உம்மன்புருவை
ஒருநாளும் நாம்
மறவோம்
ஓயதெம் துன்ப அலை
ஔவைமொழி கேட்டு
அஃகம்கேடச்
சென்றனையோ?

இன்று (29 03-86ல்) அன்னாரது வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

பிரிவால் வாடும்:

அன்பு மனைவி,
ஆருயிர்ப் பிள்ளைகள்,
இனிய தாய், தந்தை,
ஈடில்லா சகோதரர்கள்.
பெரியபளை,
(C 1477) பளை.


### வவனியாவில் விளையாட்டு அதிகாரி கைது

(வவனியா)

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரி திரு. மு. ஆனந்தகுமார் ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை தமது உத்தியோக அலுவல் காரணமாக வவனியா செயலகத்துக்குச் சென்ற அவர், செயலக வாசலில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்

வவனியா ஆயுதப்படை முகாமுக்கு இவர் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத்தெரியவருகிறது [மா]

### பம்பாயில் அமெரிக்க 'கொக்கைன்'!

(கொழும்பு)

பம்பாயில் சுங்க அதிகாரிகள் சுமார் 7 லட்சம் அமெரிக்க டாலர் பெறுமதியான 3½ கிலோ 'கொக்கைன்' என்ற போதவஸ்து கைப்பற்றி உள்ளார்கள். 14 பொதிகளில் இருந்த போதைப்பொருள் அமெரிக்காவிலிருந்து கடத்தி வரப்பட்டதாம்

சுத்திகரிக்கப்படாத 'சொக்கன்' பம்பாயில் கைப்பற்றப்பட்டது இதுவே முதல் தடவையாகும். (ச)

### ஓமந்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

நேற்று முகாம் அமைப்பதற்கான முட்கம்பிகள், ஜெனரேட்டர் மற்றும் உபகரணங்கள் கொண்டுசெல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது

இதுவிஷயம் இவ்வாறிருக்க, கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட பாரிய 'கிறேய்ன்' இயந்திரத்தின் உதவி மூலம் எரிக்கப்பட்டும் குண்டுவைத்துத்தகர்க்கப்பட்டுமுள்ள ரயில் என்ஜின் அங்கிருந்து இழுத்து வரப்பட்டு வவனியா ரயில் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதேசமயம் வவனியாவில் சிலகுண்டுகள் வெடித்த சத்தம் கேட்டதாகவும் தெரிகிறது. (ய-மா)

# ''மனித வாழ்வின் கலை, கலாசாரங்களுக்கு அடிப்படையானவை ஆலயங்களே''

## நூல் வெளியீட்டு விழாவில் 'வித்தி'

[யாழ்ப்பாணம்]

''மனித வாழ்வு, பண்பாடு, கலை, கலாசாரங்களை அடிப்படையாகக் கொண்டு அமைவதற்கு முக்கியஸ்தானங்களாக ஆலயங்கள் அமைகின்றன. இத்தகைய ஆலயங்களையும், ஆலயங்களோடு தொடர்புபடுவோரின் நெறிமுறைகளையும் விளக்கிவரும் இந்நூல் சைவ உலகில் மாபெரும் எழுச்சியை ஏற்படுத்தும்''

இவ்வாறு சிவாலய சேவை ஏன்? எப்படி நூலை அண்மையில் வெளியிட்டு வைத்துப் பேசிய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு சு. வித்தியானந்தன் கூறினார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமண்டபத்தில் ஏழாலை சைவசமய அபிவிருத்தி சங்க ஆதரவில் பண்டிதர் மு. கந்தையாவால் எழுதப்பட்ட மேற்படி நூல் வெளியீட்டு விழா சங்கத் தலைவர் திரு. சி. சக்திகிரீவன் தலைமையில் நடந்த சமயம் துணை வேந்தர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இளைஞர்கள் மத்தியில் சமய நம்பிக்கை குன்றிவருகின்ற நேரத்தில் சிவாலய சேவை ஏன்? எப்படி? என்ற கேள்விகள் எழுவது இயல்பானதே. இத்தகைய கேள்விகளுக்கு தர்க்கரீதியாகவும், தத்துவரீதியாகவும் விடையளிக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது'' என்றார்

நூலாசிரியர் பண்டிதர் மு கந்தையா பேசுகையில்; ''இந்நாடு சிங்களவருக்கும், தமிழருக்கும் உரியது என்று கூறிவந்த ஜனாதிபதி இன்று சிங்களவருக்கு உரியது என்று கூறியுள்ளார். இவை இரண்டும் ஏற்கக் கூடியவையல்ல. இந்நாடு சிவனுக்குரியதென்பதை உணராதமைத இன்றைய குழப்பங்களுக்கு காரணம்'' என்றார்.

மேற்படி சங்கத்தலைவர் திரு. சி சக்திகிரீவன் பேசுகையில்; ''ஆலயங்கள் வியாபாரஸ்தாபனங்கள் அல்ல, இவை சிவானுபூதியை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் மைய நிலையங்கள் ஆகும் இச்சிவாலயங்களை சீரியமுறையில் பேணுவதன் மூலம் சைவத்தமிழ் மக்கள் மத்தியில் அமைதி நிலவவழி பிறக்கும்'' என்றார்.

முதற்பிரதியை தெல்லிப்பழை துர்க்காதேவஸ்தானத்தினரும், திரு. நல்லையா, திரு சிவமகாலிங்கம், திரு. சி. கணேசன். திருமதி பொன்னம்மா கிருஸ்ணபிள்ளை ஆகியோரும் பெற்றனர்.

[-வண்ணை, மாவை]

## திடீர் பரிசோதனை

[வவனியா]

வவனியா கல்வித் திணைக்கள திடீர் பரிசோதனைக்குழு கல்விப் பணிப்பாளர் தலைமையில் பாடசாலைகளுக்குத் திடீர் விஜயங்களை மேற்கொண்டு ஆசிரியர்களுக்கு ஊக்கம் அளிக்கின்றது.

இக்குழு ஆசிரியர்களுடைய பாட ஆயத்தம், பாடக்குறிப்பு ஆகியவற்றையும் பரிசீலனை செய்கின்றது எனக் கல்வி அதிகாரி ஒருவர் கூறினார்.

வன்னி மாவட்டத்தின் கல்வித்தரத்தினை உயர்த்தும நோக்குடனேயே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிந்தது.

## சிரமதான மூலம் துப்புரவு

(சாவகச்சேரி)

கைதடி நவபுரம் வீடமைப்புத் திட்டத்திற்கான காணியினை சர்வதேச சமாதான சேவை இயக்கத்தினரும் நவபுரம் கிராமஅபிவிருத்திச்சங்க உறுப்பினர்களும் கடந்தஞாயிற்றுக்கிழமை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

இப்பணியில் சுமார் ஐம்பதுக்கும் மேலான மக்கள் பங்கு கொண்டிருந்தனர்.

## உடுவில் மகளிர் அவைக்கிளை

(உடுவில்)

உடுவில் மகளிர் அவைக்கிளை உடுவில் சுதந்திரன் விளையாட்டுக் கழகத்தில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பின்வருவோர் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்; செல்வி: இ. வசந்தி, உப- தலைவர் செல்வி பி. வசந்தா, செயலாளர்: செல்வி க. கிரிஜா, உபசெயலாளர்: செல்வி கே. தயாளினி, தனாதிகாரி: செல்வி. ஆர். யுனற்ரு 9பேர் கமிட்டி உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ் மகளிர் அவைத் தலைவி செல்வி கார்மேகலா அவை பேச்சாளர்கள் இரா. முருகையா, து. த. தியுட்டன் ஆகியோர் உரைநிகழ்த்தினர்கள். (க)

# ''கூட்டுறவுச் சேவையின்: அத்தியாவசியம் மக்களால் இன்று உணரப்பட்டுவிட்டது''

[மாவிட்டபுரம்]

''கடந்த காலங்களில் கூட்டுறவு சங்கங்கள் கொள்ளை, களவு, வாகனக் கடத்தல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருந்தன ஆனால் இன்று கூட்டுறவுச்சங்கங்களின் சேவை அத்தியாவசியமானது என்ற உணர்வு மக்களுக்கு ஏற்பட்டதால் இன்று மேற்படி இழப்புக்கள் குறைந்துள்ளன.''

இவ்வாறுயாழ்.தேசிய கூட்டுறவுச்சபை வருடாந்தக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய மேற்படி சபைத்தலைவரும், தெல்லிப்பழை ப நோ. கூ. சங்க தலைவருமான திரு சி. சிவமகாராசா கூறினார்.

யாழ்.கூட்டுறவு உதவி எண்பார்வையாளர் பணிமனையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்; கூறியதாவது;

''இன்றையகாலகட்டத்தில் சிவில் நிர்வாகம், சீர்கெட்டுள்ள நேரத்திலும் கூ. சங்கங்கள் மக்களுக்கு அளப்பரிய சேவை யாற்றிவருகிறது. முக்கியமாக அத்தியாவசியப் பொருள்களை குறை இல்லாமல் வழங்குகின்றன.

''எமக்கு அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுத் தர யாழ் உணவு இலாகாவும், அரசாங்க அதிபரும் அளித்த உதவியை இந்நேரத்தில் நாம் நினைவுகூரவேண்டும். அவர்கள் தொடர்ந்தும்உதவவேண்டும அத்துடன் தேசியகூட்டுறவு சபையும் நல்லசேவையை அளித்துள்ளது

''இந்நேரத்தில் சில கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடற்தொழிலாளர் சங்கம் மூடப்பட்டதால் தொழிலாளர்கள் வேலைஇழந்து கஷ்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தெங்குபனம் பொருள் சங்கம் இயங்கமுடியாது தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. இந்நிலை மாற சகலகூட்டுறவு இயக்கங்களும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

''எமது சங்கங்கள் அகதிகளுக்கு உதவுவதிலும், அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்திலும் தொடர்ந்து செயல்பட சகலரும் உதவ வேண்டும்'' என்றார்.

மேற்படி சேசிய சபையின் தலைவராக சி. சிவமகாராசா ஏகமனதாக மீண்டும் தெரிவானார். உபதலைவராக திரு. சி. வைத்திலிங்கம் தெரிவானார்.



## நான் டிங்கிரி

1981-03-22 ஆம் நாள் தையிட்டிப் பிள்ளையார்கோவிலடி நாடக மேடையில் அந்த நகைச்சுவை நடிகர் நடித்துக் கொண்டிருக்கிறார். அவையில் அடிக்கடி குபீர் குபீரென்று சிரிப்பொலி எழும்புகின்றது. திடீரென்று அந்த நடிகர் மார்பைக் கையினால் பொத்திக் கொண்டு மேடையில் அப்படியே சாய்கின்றார். அவைஅதுவும் ஒரு நடிப்பென எண்ணி ஆஹா ஹாரம்செய்கிறதுகடைவாயல இரத்தக்கோடு கிழித்திருக்க, விழுந்தவர் எழும்வேயில்லை.

உயிருள்ளவரை நடிப்பு என வாழ்ந்த அந்த நடிகர் வேறு யாருமில்லை. அவர்தான் முப்பதாண்டுகளுக்கு மேலாக நாடகமேடைகளிலும் திரைப்பட உலகிலும் கொடி கட்டிப் பறந்த டிங்கிரி கனகரத்தினம். இவர் நடித்த நாடக மேடைகள் 3580 ஆகும். வாடைக்காற்று, தெய்வம் தந்தவீடு, ரத்தத்தின் ரத்தமே முதலிய திரைப்படங்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை. ரத்தத்தின் ரத்தமேயில் இவருடன் கூடநடித்த நாகேஷ் இவரை மிகவும் வியந்து பாராட்டினார். கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் அரவணைப்புக்கும் ஆளாகியிருந்தவர் 1986-3-27 ஆம் நாள் இவரது ஐந்தாம்ஆண்டுநினைவு கொண்டாடப்பட்டது.

— செ. செ.

## மின்சாரம் வழங்க ஏற்பாடு

[சுண்டுக்குளி]

யாழ். அபிவிருத்திச் சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலக எல்லைக்குட்பட்ட நவலியைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்து 1984ம், 85ம் ஆண்டு மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு ஒரு வார காலத்தில் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமென்று ஆனைக்கோட்டை அபிவிருத்திச் சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு எஸ். மகாதேவா கூறியுள்ளார்.


எம் டீ சோப் வழங்கும் புத்தாண்டு அதிர்ஷ்டம்

11 அரிய பரிசுகளைத் தட்டிக்கொள்ள முந்துங்கள்!

1-வது பரிசு:
ஒரு புதிய துவிச்சக்கர வண்டி.

2-ம், 3-ம், 4-ம், 5-ம், 6-ம் பரிசுகள்:
புதிய நைலெக்ஸ் சேலை.

7-ம், 8-ம், 9-ம், 10-ம், 11-ம் பரிசுகள்: பாடசாலைப்பை (SCHOOL BAG)

பங்குபற்றும் முறை

உங்கள் முழுப்பெயர், விலாசம், வயது ஆகியவற்றுடன் உங்களது அல்லது உங்கள் பெற்றோர், அல்லது பாதுகாவலரின் அடையாள அட்டை இலக்கத்தையும் ஓர் 4 x 2 அங்குல அளவு வெள்ளைக்கடதாசியின் ஒரு பக்கத்திலும் நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர், விலாசம் ஆகியவற்றை மறுபக்கத்திலும் எழுதி அத்துடன்
5 எம் டீ சோப் மேலுறைகளையோ அல்லது 5 எம் டீ நீல சோப் மேலுறைகளையோ அல்லது ஒரு 'எம் டீ பார் சோப்' மேலுறை அல்லது இரண்டு எம் டீ அரைபார் சோப் மேலுறைகளை சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

* முதலாவது பரிசைப் பெறுபவர் சவர்க்காரம் வாங்கிய கடைக்கு ரூபா 250/- பெறுமதியான பொருட்கள் இனாம்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி!

எம் டீ என்ரபிறைஸ், தொழிற்பேட்டை, அச்சுவேலி.

★ 12-4-86 பிற்பகல் 5-00 மணிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.




எம் டீ சோப்




விலை ரூபா 2/- மட்டுமே

தேசிக்காய் வாசனை கொண்ட தரமான எம் டீ தயாரிப்புக்களைப் பாவித்து நன்மையடையுங்கள்.

தரமான உள்ளூர் உற்பத்திகளை ஆதரியுங்கள். (A 341)

## 3-வது கிரிக்கெட் டெஸ்டில்

# குருசிங்கா - ரணத்துங்கா சாதனை வீரர்கள்!

[கொழும்பு]

இலங்கை - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளிடையே கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் நடைபெற்ற 3-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி எத்தரப்பினருக்கும் வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்த போதிலும், இலங்கைக் கோஷ்டியின் கையே இப்போட்டியில் ஓங்கி இருந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்த டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கைக் கோஷ்டி மொத்தம் 281 ஓட்டங்களேயும், பாகிஸ்தான் கோஷ்டி 318 ஓட்டங்களையும் பெற்றிருந்தது. பாகிஸ்தான் கோஷ்டியின் துடுப்பாட்ட வீரர் சலீம் மலேக் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 122 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். எமது இலங்கை வீரர்களும், 2-வது இன்னிங்ஸில் 'செஞ்சரி' எடுப்பார்களா என்ற அவா ரசிகர்கள் மனதில் ஏற்பட்ட போதிலும் பாகிஸ்தான் வீரர்களின் சாதுரியமான பந்து வீச்சில், இது சாத்தியமாவது கஷ்டம்தான் என்பதையும், அவர்கள் மறந்துவிடவில்லை.

''நாம் எந்தவகையான பந்து வீச்சினையும் சமாளிக்கும் நிலையை அடைந்துவிட்டோம். குறிப்பாக, எமது இளம் ஆட்டக்காரர்கள் சிறப்பாக விளையாடுகிறார்கள். அவர்களை இளமையிலேயே 'நசுக்கி' விடாமல், சிறப்பாக அவர்களை பயன்படுத்தினால், நாம் உலக கிரிக்கெட் அரங்கில் குறிப்பிடத்தக்க ஒரு இடத்தை வகிக்க முடியும்'' என, இலங்கை கிரிக்கெட் கோஷ்டியின் காப்டன் டுலிப் மென்டிஸ், 2-வது டெஸ்டில் வெற்றி பெற்றதும், தொலைக்காட்சி நிருபருக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அவரின் கூற்று 3-வது டெஸ்டில் உண்மையாக்கப் பட்டு விட்டது. இலங்கைக் கோஷ்டி 2-வது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாட ஆரம்பித்ததும், ஆரம்பத்துடுப்பாட்டக்காரர்களான வெத்திமுனியும் மஹானாமாவும் முறையே 14, 04 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அதன் பின்பு துடுப்பெடுத்தாடிய சோடிகளான அரவிந்த டி சில்வாவும் குருசிங்காவும் ஓட்டங்களின் எண்ணிக்கையை 83 ஆக உயர்த்தியபோது, அரவிந்த டி சில்வா 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

5-ம் நாள் ஆட்டம் தொடங்கும் போது, இளம் ஆட்ட வீரர் குருசிங்கா 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தார், அனுபவசாலியான அர்சுண ரணத்துங்கா ஓட்டம் எதுவும் எடுக்காத நிலையில் இருவரும் சோடி சேர்ந்து ஆடமுற்பட்டனர்.

இவ்விரு சோடிகளையும், உலகப்புகள் பெற்ற, பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களால் ஆட்டமிழக்கச் செய்யமுடியவில்லை. இவ்விரு வீரர்களும் பல சாதனைகளை முறியடித்தார்கள். இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் டெஸ்ட் போட்டிகளில் சோடி சேர்ந்து ஏற்படுத்திய சாதனைகள் அனைத்தையும் முறியடித்து விட்டார்கள். இளம் வயதிலேயே டெஸ்ட் போட்டியில், ஆட்டமிழக்காமல் 'செஞ்சரி' எடுத்தார் என்ற புதிய சாதனையை வீரர் குருசிங்கா ஏற்படுத்தினார். வீரர் குருசிங்காவைவிட முதலில் இப்போட்டியில் 'செஞ்சரி' எடுத்த பெருமையை வீரர் அர்சுண ரணதுங்கா தட்டிக்கொண்டார்.

ஆட்டம் முடிவடையும் போது, அர்சுண ரணத்துங்கா ஆட்டமிழக்காமல் 134 ஓட்டங்களையும், குருசிங்கா ஆட்டமிழக்காமல் 116 ஓட்டங்களையும் எடுத்து, இலங்கை இதுவரை டெஸ்ட் ஆட்டத்தில் 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 320 ஓட்டங்களை மிகக் கூடுதலாக முதல்தடவை பெற்றுக் கொண்டது, என்ற பெருமையையும் ஏற்படுத்தினர்கள் இந்த இரு சாதனை வீரர்கள். (வி)

## இன்றைய பலன்

மாதம்- பங்குனி
திகதி- 16[1986-3-29]
கிழமை- சனி
திதி- சதுர்த்தி பி.இ.வரை
நட்சத்திரம்- விசாகம் பி.இ. வரை

மேடம்; தூரத்துப்பயணம் துயரத்தைத் தரலாம். வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். வைத்தியச் செலவிற்குமிடமுண்டு.

இடபம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். இசைத்துறையில் ஆர்வம் பிறக்கும் பிள்ளைகளினால் பெருமைக்குமிடமுண்டு.

மிதுனம்; நண்பர்களே உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பர். சிறுவிடயமொன்று அதிக பரபரப்பை ஏற்படுத்தும். தொழில்முறையில் நஷ்டமேற்படலாம்.

கடகம்: இறை வழிபாடு மேலிடும். இதயத்தில் அமைதி ஏற்படும். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்குதவுவர்.

சிங்கம்: உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள். தொழில் துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும். வெளியிடத்துச் செய்திகிடைக்கும்.

கன்னி: காதலர் வாழ்வில் கனிவான தினம். புரட்சிகர சிந்தனைகள் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் அதிகரிக்கும்.

துலாம்: அந்நியர் மத்தியில் அதிகம் பழக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். வயிற்றுக் கோளாறுக்குமிடமுண்டு உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

விருச்சிகம்: குடும்பத்தில் சிறுபூசல்கள் தலைதூக்கும். பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றக் கூடும். ஆத்திர உணர்ச்சியால் மோதல் ஏற்படும்.

தனுசு; தானிய நஷ்டத்திற்குமிடமுண்டு வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக்கொள்ளவும். சகோதர சுகக்குறைவுமுண்டு.

மகரம்: கனிவான நினைவுகளில் இன்று மிதந்து செல்வீர்கள். கல்வித்துயையில் வித்துவத் தன்மை தென்படும். வாகனம் செலுத்துவோர் கவனம் வேண்டும்.

கும்பம்; மெத்தவும் பொருள் சேரும். மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிடைக்கும். தேனுனை செய்தியுடன் வாழ்வும் உண்டு.

மீனம்: செய்தொழிலால் சிறப்புக்கிடைக்கும். வழக்கு விவகாரம் வெற்றியைத்தரும். வெளியிடத்துச் செய்தியும் உண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## ரூபவாஹினி

மாலை:
5-00 செய்திகள்
5-05 உள்ளூர் உதை பந்தாட்டம்
5-30 உலக விளையாட்டரங்கு
6-30 செய்திகள் [தமிழ்]
7-00 ஆங்கில நாடகம் 'த லவ் ஒவ் ஜோனி ஜொன்சன்
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 'தாராதேவி' டெலி நாடகம்
9-00 செய்திகள் (ஆங்கிலம்
9-25 'தாம சபாவ'
10-00 கலை நிகழ்ச்சி
10-40 ஒளிபரப்பு முடிவு

## சீசெல்ஸ் பயணம்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இரசாயன ஆசிரியராகப் பணிபுரிந்த திரு பி தேய்வேந்திரன் சீ செல்ஸ் நாட்டுக்கு ஆசிரிய நியமனம் பெற்று குடும்பத்துடன் சென்றுள்ளார்.

இவரது சேவையைப் பாராட்டும் பொருட்டும், பிரியவிடை அளிக்கும் பொருட்டும் சாவகச்சேரி லியோ கழகத்தினர் அண்மையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் பிரிவுபசார வைபவம் ஒன்றினை நடாத்தினர்

திரு தெய்வேந்திரன் லயன்ஸ் கழகத்தின் முக்கிய பிரமுகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நூல்கள் சேகரிப்பு

(சாவகச்சேரி)

அறவழிப் போராட்டக்குழுவின் நூலகத்தினை அபிவிருத்தி செய்யும் பணிக்கு உதவும் பொருட்டு, லண்டனிலும், தமிழ் நாட்டிலும், நூல்கள் திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு திரட்டப்பட்டு இங்கு அனுப்பி வைக்கப்படும் புத்தகங்களைக் கொண்டு அறவழிப் போராட்டக் குழுவினர் தமது பாலர் பாடசாலைகள் நடைபெற்று வரும் 25 கிராமங்களிலும் - நூலகப் பணியை ஆரம்பித்து நடாத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

# இயக்கங்களின் ஐக்கியத்தை வற்புறுத்தி துண்டுப்பிரசுரம்!

[யாழ்ப்பாணம்]

'இயக்கங்களின் ஐக்கியத்தை வலியுறுத்தி வெகுஜனஅமைப்புக்களின் கூட்டணி, தொழிற்சங்கங்கள், அன்னையர் முன்னணி, மக்கள் குழுக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தகர் சங்கம் மற்றும்அனைத்து வெகுஜன அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும்'.

உசன், மிருசுவில் மக்கள் குழு நேற்று வெளியிட்ட பிரசுரத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

எதிரி அரசோ ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் கூட்டுச் சேர்ந்து திட்டமிட்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. போர்த்தளபாட வளர்ச்சியிலும் ஸ்ரீலங்கா பேரினவாத அரசு மிகவும் உறுதியடைந்து விட்டது.

விடுதலை அமைப்புக்கள் ஒன்றுபடாதவரை தமிழீழ விடுதலை என்பது சாத்தியமற்றது என்பது உணரப்பட்டு விட்டது. இந்த நிலையிலும் கூட விடுதலை அமைப்புக்கள் ஐக்கியப்படாமை கண்டிக்க வேண்டியது, திருத்தப்பட வேண்டியது. ஐக்கியம்என்பது வெறுமனே தலைமைகளுக்கிடையேயான பேச்சுவார்த்தை மட்டுமல்ல என்பதை நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

ஒன்றிணைதல் என்பது பின்வரும் விடயங்களில் அமைய வேண்டும். ஒரே அமைப்பாகுதல், பொதுவான அரசியல [கட்சி] நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பொதுவான யுத்த, நடைமுறைத் தந்திரங்களை வகுத்துச் செயற்படுதல், பொதுப் பொருளாதாரத் திட்டத்தை உருவாக்கிக் கொள்ளுதல், பொதுவான நிதிசேகரிப்பு.

இவ்வாறு ஒன்றிணைவதால் இயக்கங்களுக்கிடையேயான மோதல்களுக்கு இடமில்லாமல் போகும். இயக்க உள் மோதல்கள் குறைக்கப்படும். தழுவாதம ஒழிக்கப்படும். எமது போராட்டத்தின் வெற்றி உறுதிப்படுத்தப்படும்.

எமது இவ்வேண்டுகோளுக்கு நீங்கள் ஒருமாத காலத்துள் சாதகமான பதில் தரத் தவறும் பட்சத்தில் ஐக்கியத்தை வலியுறுத்தி போராட வேண்டியநிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

விடுதலை அமைப்புகளை ஐக்கியப்படுத்துவது மக்களாலேயே முடியும். மக்கள் இதைச்செய்யாமல் இயக்கங்களைக் குறைகூறிப் பயனில்லை. மக்கள் சக்தியால் முடியாத தொன்றுமில்லை என்பதை பிலிப்பைன்ஸ் மக்களும், மலையக மக்களும் அண்மையில் நிரூபித்துவிட்டார்கள்.

## புதிய நிர்வாகிகள்

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அண்மையில் நடைபெற்றது

பூநகரி உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு வ. அரியரத்தினம், உப தலைவர்கள் திரு. அ. அருணாசலம் ஆ. இராசரத்தினம், செயலாளர் திரு. செ. குழந்தைவேல், உப செயலாளர் செல்வி இ தவமலர், பொருளாளர் திரு. கு. நவரத்தினம். மற்றும் பல நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பகுதிக்கான பிரஜைகள் குழுவின் இவ் வருடத்துக்கான நிர்வாகசபைத் தெரிவுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. பின் வருவோர் புதிய நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. பொ. தங்கராசா, துணைத்தலைவர்கள் திரு. சி. கருணாநிதி, திரு. த. சீவரத்தினம், செயலாளர் திரு. ஏ. வீ. கே. மாணிக்கம் துணைச்செயலாளர் திரு. கி துரைசிங்கம், தனாதிகாரி திரு. வ, அரியரத்தினம். மற்றும் பல உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

பலாலி புனித செபஸ்தியார் சனசமூக நிலைய நடப்பு வருட நிர்வாகிகள் வருமாறு: போஷகர் அருட் திரு. தி. தேவராஜன் அடிகள் தலைவர் ஞா. வேதநாயகம், உப தலைவர் ஜெ. இராசநாயகம் செயலாளர் செ. றெங்கல்லி, உபசெயலாளர் அ. பத்திநாதர், இணைப் பொருளாளர் பா. சாள்ஸ், சி. பிலேந்திரம், இணை வெளித் தொடர்பாளர்கள் செ. எட்வேட் ராசா ஞா. றேமன் ஜெயக்குமார் இணை நிர்வாகிகள் வே வெனான்சியூஸ், சு. இம்மானுவேல் இத்துடன் 9 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## 19 இளைஞர் விடுதலை

(திருகோணமலை)

பூஸா முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்ட மூதூரைச் சேர்ந்த 19 பேரையும அப்பகுதியைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் பாதுகாப்பு இணைப்பதிகாரியின் உதவியுடன் முன்னர் இருந்த சொந்தக் கிராமங்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர்.

சேருவில, பூநகர்ப் பகுதியிலுள்ள அகதிகள் முகாம்களில் இவர்களது உறவினர்கள் இப்பொழுது இருக்கிறார்களாம். நேற்றுக்காலை மூதூர் சென் ஜோசப் கல்லூரியில் வைத்து தனியார் பஸ்மூலம் 19 பேரும் கொண்டு செல்லப்பட்டார்கள். (மா)


## டென்மார்க் பயணம்

உடனடியாக டென்மார்க் செல்வதற்கு தொடர்பு கொள்ளவும்.


AIR-TRANSIT

538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

FREIGHT AND TRAVELS LANKA LTD.,

307, Galle Road, Colpetty, Colombo-3 T.P.: 573609

[C-1476]



இலங்கை அண்ணு தி. மு. க. மற்றும் 15 கூட்டமைப்புக்களுடன் தரை, வான், கடல் தாக்குதலை எதிர்த்து யாழ். நகரில் நடத்திய தீவட்டி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள். படம்: ஏ. வி. எம்.

# "வர்த்தகர் அனைவரும் சங்கத்தில் சேருங்கள்"

(யாழ்ப்பாணம்)

''வர்த்தகர்கள் யாவரும்சங்கத்தில் அங்கத்தவர்களாகப் பதிவுசெய்து கொள்ளவேண்டும் அப்போதுதான் அவர்களின் பிரச்னைகள், பாதிப்புக்கள் பற்றிச் சங்கம் கேட்டறிந்து அவற்றிற்கு நிவாரணம் காண முயற்சிக்கும்''.

யாழ். பாரதி பாஷா வித்தியாசாலையில் நேற்றுப்பிற்பகல் நடந்த வர்த்தகர் சங்கப் பொதுக்கூட்டத்தில் யாழ். வர்த்தக சங்க செயலாளர் திரு எஸ். நமசிவாயம் இவ்வாறு கூறினர்.

சங்கத் தலைவர் திரு. எஸ் வி. முருகேசு தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் இருநூற்றுக்குமேற்பட்ட வர்த்தகர்கள் கலந்துகொண்டார்கள்,

திரு. நமசிவாயம் மேலும் பேசுகையில்; சகல வர்த்தகர்களும் சங்கத்தில் அங்கத்தவர்களாகப் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்றும் அவர்கள் பிரச்னைகள். பாதிப்புக்கள் பற்றி மறைக்காமல் எடுத்துக்கூறினல், நிவாரணம் தேடப்படும் என்றும் கூறினர்

வர்த்தக சங்கத்திற்கு யாப்பு ஒன்று அவசியம் என்றும் சங்கத்தின், நோக்கங்கள். செயல்பாடுகள், வர்த்தகர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் கூட்டத்தில் வர்த்தகர்கள் வலியுறுத்தினர்கள்.

ஏ ரல் 6ம் திகதி நடைபெறவிருக்கும் சங்கத்தின் வருடாந்தக்கூட்டத்தில், சங்கத்தின் நோக்கங்கள்; செயல்பாடுகள் பற்றி விரிவாக அறிவிக்கப்படுமென்றும், அங்கத்தவர்களாகப் பதிவுசெய்தவர்கள் மட்டுமே வருடாந்தக் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. [க]

## வவனியாமாவட்ட நீதிமன்றம் குண்டினல் சேதம்

(வவனியா)

கடந்த வியழக்கிழமை இரவு வவனியா மாவட்ட நீதிமன்றத்தில் இனந்தெரியாதவர்களினல் வைக்கப்பட்ட குண்டொன்று வெடித்தனல் கட்டிடத்தின் ஒரு பகுதி சேதமடைந்தது.

இம் மாவட்ட நீதிமன்றம் வவனியாப் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ளது என்பது குறுப்பிடத்தக்கது. [வா]

## விடுதிகளிலிருந்து தாதிகளுக்கு 'கல்தா'

[கொழும்பு]

வேலைநிறுத்தம் செய்துவரும் தாதிமார்களை ஆஸ்பத்திரிகளிலுள்ள தாதிமார் விடுதியிலிருந்து போதனு வைத்தியசாலைகள் அமைச்சு வெளியேற்றி வருகிறது.

ருகம தாதிமார் விடுதியிலிருந்து தாதிமார்கள் நேற்று நண்பகல் வெளியேற்றப்பட்டனர். ஏனைய ஆஸ்பத்திரிகளிலுள்ள தாதிமார்களை வெளியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (பி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Ee anadu P. O. Box 49, Teleg am, Eelanadu, Telephone, 22389, 24126.

## பிடிபட்டவர் உளவறியும் நபரா?

(கிளிநொச்சி)

ஆனையிறவில் வைத்து உளவறியும் ஒருவரை இளைஞர்கள் கோஷ்டி ஒன்று மடக்கபபிடித்ததாம். இவர் ஆனையிறவுப் பகுதியில் உளவு வேலையில் ஈடுபட்டிருக்கையில் பிடிபட்டதாகக் கூறப்படுகின்றது. இங்குள்ள வீடுகள், இளைஞர் நடமாட்டம் முதலானவற்றை இந்த நபர் கண்காணித்து வந்தவர் என்றும் தெரியவந்ததாகவும் இதே போல் பல உளவாளிகள் கிளிநொச்சிப்பகுதியில் நடமாடி வருவதாகவும் கூறப்படுகிறது.

## ஆறு பேருக்கு நடந்ததென்ன?

(முல்லைத்தீவு)

''அண்மையில் நெடுங்கேணிப்பகுதியில் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்ட 18 பேரில் ஆறு பேரைக் காணவில்லை'' என முல்லைத்தீவு மாவட்டப் பிரஜைகள் குழுவினரிடம் நெடுங்கேணி மக்கள் முறையீடு செய்துள்ளார்கள்.

ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட 18 பேரில் 12 பேர் மட்டும் வவனியாவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள். மிகுதி ஆறுபேரையும் காணவில்லையாம்

நெடுங்கேணிப்பகுதியில் ஆயுதப்படையினரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு உதவிப்பணம் வழங்கப்பட்டுள்ளதாகப் பிரஜைகள் குழுச்செயலாளர் திரு. இ. தியாகராசா தெரிவித்தார்.

## பருத்தித்துறையில் வயோதிபர் பலி

(புலோலி)

பருத்தித்துறையில் இளைப்பாறிய சுகாதாரத் திணைக்கள காவலாளியான நான்குபிள்ளைகளின் தந்தையொருவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கிலக்காகி ஸ்தலத்திலேயே மரணமானர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த ஏ. கணேசபிள்ளை [வயது-60] என்பவரே துப்பாக்கிச்சூட்டிற்குப் பலியானவராவர்.

### பெண்ணின் சடலம்

ஏற்கனவே பருத்தித்துறை ஆலடிப்பிள்ளையார் ஆலயப் பக்கத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமான செல்வி எ. நாகம்மா என்பவரின் சடலம் இதுவரை மீட்கப்படவில்லை என்றும் தெரிவிக்சப்படுகிறது

### சடலம் கடத்தப்பட்டது

தொண்டமானுறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயப் பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி மரணமான இருவரின் சடலங்கள் மீட்கட்பட்டு மந்திகை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதில் ஒருவரின் சடலம் இனந்தெரியாத நபர்களினல் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. மற்றச் சடலம் மரணவிசாரணையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## அந்தச் சுவரொட்டி

[உடுவில்)

சுன்னுகம், மானிப்பாய்பகுதிகளில் பலரும் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் ஒரு சுவரொட்டி அங்குமிங்கும் ஒட்டப்பட்டுள்ளது.

'தொடரும் அராஜகம்' என்ற தலைப்பிலான மேற்படி சுவரொட்டி கூறுவதாவது ''அண்மையில் தோழர்கள் அழியாதகோலம் [சிவர ஜா], ஹோப்ஸ்ஆகியோர் 'புளொட்'டிலுள்ள அராஜகவாதிகளால் கொலைசெய்யப்பட்டதாக அடிபடும் செய்திகள் பற்றி அறிகின்றோம். இது தொடர்பாக மிகுந்த வேதனையடைவதோடு இதுதொடர்பான உண்மை நிலையையும் ஆராய்கிறோம். கொலைசெய்யப்பட்டது உண்மையானல் இவ் அராஜகச்செயலிற்குஎதிராகவும் ஏனைய அராஜகச் செயல்களுக்கு எதிராகவும் மக்களோடு எமது கரங்களை இறுகப்பிணைத்து அராஜகவாதம் எங்கிருந்து - எவ்வழியில் வந்தாலும் வேரோடு களைய உறுதியாய் செயற்படுவோம்.

இச்சுவரொட்டியின் அடியில் 'சகபோராளிகள்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயணிகள் வான் மீது ஆகாயத்தாக்குதல்; 2பேர் பலி!

(யாழ்ப்பாணம்)

பிரயாணிகள் சென்று கொண்டிருந்த வான் மீது ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதால், இருவர் சொல்லப்பட்டதாகவும் சிலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிறபகல் வசாவிளான் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பலாலி முகாம்களை அடுத்துள்ள பகுதிகளில் ஆகாயத் தாக்குதல் நேற்றுடன் மூன்றுவது நாளாகும்.

## இராணுவம் சோதனை

[முல்லைத்தீவு]

நேற்று முன்தினம் முல்லைத்தீவு களைப்பாடு என்ற இடத்துக்குச் சென்ற இராணுவம் சில வீடுகளில் சோதனை நடாத்தியது. வீடுகளில் சோதனை நடக்கும் பொழுது பாதுகாப்பாகச் சிலர் பணயம் வைக்கப்பட்டிருந்கனர்.

இதுஇவ்வாறிருக்க 26ம்திகதி காலை பத்து மணியளவில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்துக்கு இராணுவத்தினர் திடீரென ஜீப் வண்டிகளில் வந்து பாடசாலையைச் சுற்றி பார்வையிட்டனர். அந்த நேரம் பாடசாலையில் பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதனல் மாணவர்மத்தியில் பதற்றம் ஏற்பட்டது.

## மரண அறிவித்தல்

### முத்தையா இராமகிருஷ்ணன்

பருத்தித்துறை 1ம் கட்டை ஒழுங்கையைச் சேர்ந்த முத்தையா இராமகிருஷ்ணன் (இளைப்பாறியஆசிரியர், காட்லிக்கல்லூரி) மாலைதீவில் காலமானர். இவர் கணேஸ்வரி (இளைப்பாறியஆசிரியை) அவர்களின் அன்புக்கணவரும், மணிமாறன், மலர்விழி, தேன்மொழி, இளங்கீரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். (C 1484)

### திருமதி சிதம்பரப்பிள்ளை பொன்னம்மா

காங்சேசந்துறை தையிட்டியைச் சேர்ந்த காலஞ் சென்ற ஆசிரியர் திரு. சிதம்பரப்பிள்ளை அவர்களின அன்பு மனைவி திருமதி பொன்னம்மா கலமானர், அன்னரின் ஈமச்சடங்குகள் இன்று 29-3 86சனிக்கிழமை மாலை 3 மணிக்கு சாம்பில் தையிட்டி திரு. தம்பிராசாவின் இல்லத்தில் நடைபெறும் இத்தகவலை உற்றார், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

C 1485 தகவல்; க. சாந்தசோதி

### முத்தையாபிள்ளை இராமகிருஷ்ணன்

பருத்தித்துறை புலோலி கிழக்கு 1ம் கட்டை இளைப்பாறிய ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரும், மாலைதீவில் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தவருமான M. இராமகிருஷ்ணன் வியாழக்கிழமை (27-3-86) மாலைதீவில் காலமானர். இவர் அன்னமுத்து நாகரெத்தினத்தினதும் காலஞ்சென்ற முத்தையாபிள்ளையினதும் புதல்வரும், கணேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை, வடஇந்து மகளிர் கல்லூரி) அன்புக்கணவரும், மணிமாறன் (அவுஸ்திரேலியா) மலர்விழி, தேன்மொழி, இளங்கீரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், பாலகிருஷ்ணன், கோபாலகிருஷ்ணன், சவுந்தரநாயகி ஆகியோரின் சகோதரரும், துரைசாமிப்பிள்ளை, வீரகத்திப்பிள்ளை (சட்டத்தரணி யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் மருமகனும், மகேஸ்வரி, கனகாம்பிகை, கமலா, ஆறுமுகம், சண்முகநாதன், பூபாலசிங்கம், சச்சிதானந்தம். சிவஞானம், லஷ்மி செல்வநாயகம், ஈஸ்வரச்சந்திரன், செல்வரெட்ணம் ஆகியோரின் மைத்துனருமாவார். இறுதிச் சடங்கு சென்னையில் நடைபெறும்.

29 I, South Avenue, Tiruvanmiyur,
Madras-41,
(A-524)

தகவல்:-
S. விஸ்வரெட்ணம்.